பதிவுஎண் 2041 தனிப்பிரதி விலை அணா ஒன்று




**சந்தா விபரம்.**

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1-12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ. |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |


நீடித்த கால விளம்பரம் செய்வாருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமைஇழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-கார்த்திகை-மீ உக-உ (6—12—25) ஞாயிற்றுக்கிழமை | மலர் ருக



மகாத்மா காந்திக்கு ஜே

வந்தேமாதரம்! லாஹுஅக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிபத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளி நாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன்பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமிசெட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர் (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சிபெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டு விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர்நிலையம்,
மண்டி வீதி, ஈரோடு. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## காஞ்சீபுரம் தமிழர் மகாநாட்டுத் தலைவர் நடத்தையைப் பற்றி தமிழ் நாட்டுப் பத்திரிக்கைகளின் அபிப்பிராயங்கள்:—

தமிழ்நாடு:— (29-11-25).........''விஷயாலோசனைக் கமிட்டியிலும், மகா நாட்டிலும் வகுப்புவாரி பிரதிநிதித்வ சம்பந்தமாக எழுந்த தகராறுகளில் ஸ்ரீமான். கலியாணசுந்தரமுதலியார் கொடுத்த தீர்ப்புகள் மிகவும் அநீதியானவை என்பதை யாவரும் அறிவர். அவர் கொடுத்த தீர்ப்புகள் சமயோசிதம் போல் நடந்து கொள்ள வேண்டுமென்ற முறையில் சரி என்று நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் ஒரு சபையை நடத்த வேண்டியதற்கென்று ஏற்பட்டுள்ள விதிகளின்படி ஸ்ரீமான். முதலியார் கொடுத்த தீர்ப்பு ஒழுங்குமுறைதவறியதாகுமென்று கருதுகிறோம்''.........

சுதேசமித்திரன் (?) சுகோதயம்:— (26-11-25).........''காஞ்சீபுரம் மகாநாட்டின் கவனம் நாட்டின் விடுதலையொன்றிலேயே செலுத்தப்படவில்லை; ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரவர்களும், ஸ்ரீமான் எஸ். இராமநாதன் அவர்களும் செய்துவரும் தீவிர வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கிளர்ச்சியால் மகாநாட்டின் கவனம் இழுக்கப்பட்டு விட்டதென்பதில் சந்தேகமில்லை. பிராமணபிராமணரல்லாதார் என்றவேற்றுமைப் புத்தி தமிழ்நாட்டில் அதிகரித்து வருகிறதென்பதை உபசரணைக்கமிட்டி அக்ராசனரும், மகாநாட்டின் தலைவரும் அவரவர்கள் பிரசங்கத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். எனினும், இந்தவேற்றுமையைப்போக்கி ஒற்றுமையை உண்டாக்க இரண்டு தலைவர்களும் தவறிவிட்டார்கள். இதுமட்டுமல்ல; தாங்கள் பலன் தரத்தக்க யோசனை எதுவும் சொல்லாமற் போனதோடு, ஸ்ரீமான்கள் நாயக்கர், இராமநாதன் முதலியவர்களின் முயற்சிக்கு ஆக்கமோ, அழிவோ அல்லது பரிகாரமோ தேடியிருக்கலாம். இதையும் செய்யாமல், அவர்கள் முயற்சியை மகாநாட்டு மேடையின் மீது தலைகாட்டவிடாமல் ''சட்டம், ஒழுங்கு'' என்றவார்த்தைகளால் விரட்டி யடிக்கப்பட்டது; மகாநாட்டை விரையில் கலகமின்றி முடித்துவிடுவதற்கு இம்மாதிரி செய்ததாகச்சொல்லப்பட்டப் போதிலும் ஒரு முக்கியமான அரசியல் தேவையையும் நீதியையும் மதிக்கவில்லை. ஏனெனில் முதல் நாள் பொதுக்கூட்டத்தில் பிராமணரல்லாதார் மகாநாடு குழப்பத்தில் முடிந்துவிட்டபோதிலும், அடுத்தநாள் பிராமணரல்லாதார் பிரதிநிதிகளடங்கிய ஒருகூட்டத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப் பட்டு, ஒருதிட்டமும் தீர்மான ரூபமாய்த் தயாரிக்கப்பட்டு, அது மகாநாட்டின் விஷயாலோசனைக் கமிட்டியார் கூட்டத்திற்கு வந்தது. அங்கு அது சரியான முறையில் பிரேரேபனை செய்யப்படவில்லை என்பதையும் ''100-க்கு 90 பிராமணரல்லாதாருக்கு'' என்பது ''100-க்கு 75'' என்று மாறிய விந்தையையும் யாம் அறிவோம். ஆனால், இந்த பிரச்னை மகா நாட்டின் மேடையின் மீது கிளத்தப்படுமா என்பதை அக்கிராசனர் கேட்டு, அந்தப் பிரச்னைக்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறதென்பதைக் கண்டுபிடித்து, 1/3 பங்கு ஆதரவு இருந்திருந்தால் அதை மகா நாட்டில் பிரஸ்தாபிக்க அநுமதி யளித்திருக்க வேண்டும். ஜவுளிக்கடைச் சத்திரத்தில் கூடிய பிராமணரல்லாத பிரதிநிதிகளின் தீர்மானம் முழு பொறுப்போடு செய்யப் பட்டிருப்பதாக யாம் எண்ணுகிறோமாகையால், மூன்றில் ஒரு பங்கு ஆதரவு விஷயாலோசனைக் கமிட்டியில் ஸ்ரீமான். இராமசாமி நாயக்கருக்குக் கிடைத்திருக்கும். இதைக் கண்டறியாமல், பிரச்னையைக் கைநழுவவிட்டது வருந்தத் தக்கது. மறுபடியும் அது மேடையின்மீது வரும்பொழுது 25 நபர்கள் கையொப்பமிட்டால் அங்கீகரிப்பதாக அக்ராசனர் தெரிவித்தது உண்மையானால், அம்மாதிரி சொல்வதற்கு அக்ராசனருக்கு விதிகளில் அதிகாரம் கிடையாது. ஒரு தீர்மானத்தை அநுமதிப்பது அல்லது நிராகரிப்பது அக்ராசனரின் இஷ்டமல்ல. அந்த அதிகாரம் விஷயாலோசனைக் கமிட்டியைச் சேர்ந்தது. 25 நபர்கள் கையொப்பத்தோடு ஸ்ரீமான். நாயக்கர் மறுபடியும் வகுப்புவாரிபிரதிநிதித்வம் தீர்மானத்திற்கு அநுமதி கோரியபோது அக்ராசனர் மறுத்துவிட்டதற்குச் சொல்லப்பட்ட காரணங்களும் அந்த அறிவாளியின் தீர்ப்பும் ஆக்ஷேபிக்கத் தகுந்தவை.''......

ஊழியன்:— (1-12-25).........''வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் பற்றி ஒரு தீர்மானங்கொண்டு வரப்பட்டு அது விஷய ஆலோசனை சபை முதலே ஒழுங்கு முறையில் எடுத்துக்கொள்ளப்படாமல் மகாநாட்டினும் அது தலைவர் உரிமையால் மறுக்கப்பட்டொழிந்தது. அது மறுக்கப்பட்டதற்குத் தலைவரால் சில காரணங்கள் செப்பப்பட்டன. அக்காரணங்களுள் கொள்ளத் தக்கவையும் உள, தள்ளத் தக்கவையும் உள. அவற்றை வீணே விரித்துச்சொல்ல விரும்பவில்லை. அத்தீர்மானத்தைக் கொணரத்தலைவர் இடந்தந்திருக்கவேண்டுமென்பதே நமது கருத்து.''......

நவ இந்தியா:— (29-11-25)..........''பிராமணரல்லாதார் சம்பந்தமாய் வந்த தீர்மானத்தைப் பிரேரேபிக்க ஸ்ரீமான். முதலியார் அவர்கள் அநுமதியளிக்காதது வருந்தத்தக்கதே. அதற்கு முதலியார் அவர்கள் சொல்லுங்காரணமும் பொருத்தமில்லையென்று தான் அபிப்பிராயப்படுகிறோம். காங்கிரசின் பெயரால் ஒரு கட்சியார் வேலை செய்யவும், காங்கிரஸ் நிதியை அதற்கு உபயோகப்படுத்திக்கொள்ளவும், காங்கிரஸ் வாதிகளாயிருந்தும், அக்கட்சித் திட்டத்தை யேற்றுக்கொள்ள அபிப்பிராயமில்லாதாருங்கூட ஒத்துப்போகவேண்டுமேயன்றி எதிர்ப்பிரசாரம் செய்யக்கூடாதென்று, காங்கிரஸ் சபை கட்டளையிட்டிருக்கும் போதும், இத்தீர்மானம் கொண்டுவர எவருக்கு முரிமையுண்டெனவே நாம் கருதுகிறோம். ஒரு கட்சியாரின் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பது காரணமாய் மற்றொரு கட்சியார் தம்மிஷ்டப்படி நடவாது காங்கிரஸ் ஆணைக்குள்கட்டுப்பட்டுவாளாயிருப்பது ஒன்றினாலேயே அக்கட்சியார் நோக்கத்தை நிறைவேற்றும் பொறுப்பில் நேர்முகமாய் திட்டத்தை நிறைவேற்றி வைக்காவிட்டாலும், இவர்களும் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்றுதான் அர்த்தமாகிறது.

''அவ்வாறாகிய நிலையில், அக்கட்சியார் செய்யும் வேலையினால் நாட்டில் கலவரமுண்டாகாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் மற்றக்கட்சியார் தேச நிலையையுணர்ந்து ஒரு யோசனை சொல்லத்தக்க தீர்மானங்கொண்டு வருவதற்குரிமையில்லை என்று சொல்லும் வாதம் எப்படிப்பொருந்தும்? இதைப்பற்றி அதிகமாய் வளர்த்திக்கொண்டுபோக இஷ்டமில்லை''..........

ஸ்வராஜ்யா:— (24-11-25)............''வகுப்புவாரி பிரதிநிதித்வம் சம்பந்தமாக ஸ்ரீமான். ராமசாமி நாயக்கர் கொணர்ந்த தீர்மானம் ஒழுங்கற்றது என்ற காரணம் கொண்டு, மகாநாட்டின் தலைவர் ஸ்ரீமான். கலியாணசுந்தர முதலியார் தீர்ப்புக்கொடுத்ததில் சிறிது தவறு இருக்கிறது.''......

லோகோபகாரி:— (26-11-25)...........''வகுப்புவாரிபிரதிநிதித்வம் சம்பந்தமான கடைசித்தீர்மானங்களை மகாநாட்டுத் தலைவர் நிராகரித்தது பற்றி வருத்தங்கொண்டு சிறந்த தேசபக்தர்களான, ஈரோடு, ராமசாமி நாயக்கரும், மாயவரம் இராமநாத பிள்ளையும், வேறு சிலரும் மகாநாட்டை விட்டு வெளியேறியது வருந்தத்தக்கது. இந்தத்தீர்மானங்களைத் தலைவர் நிராகரித்தது தவறன்றாயினும், சட்டசபை விஷயத்தை விட்டு, மற்ற ஸ்தலஸ்தாபனங்களில், வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் வேண்டுமென்று தீர்மானத்தை மாற்றி, அதனைத்தலைவர் அங்கீகரித்து நாயக்கர் போன்ற நண்பர்களுக்குத் திருப்தி விளைத்திருக்கலாம்''...

தீனபந்து:— (1-12-25).........''வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் வேண்டுமென்று சில காலமாய் ராஜீய உலகத்தில் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. அதை யொட்டி காஞ்சீபுரத்தில் பிராமணரல்லாதார் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. ஆனால் அடுத்த நாள் பிராமணரல்லாதார் பிரதிநிதிகள் ஒன்று கூடி வகுப்புவாரிபிரதிநிதித்வம் அவசியம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டு ஒரு திட்டம் தயாரித்து கான்பரன்சு விஷயாலோசனைக்கூட்டத்திற்குக்கொண்டுவரப்பட்டது. இதை ஸ்ரீமான். இராமசாமி நாயக்கர் மகா நாட்டில் கொண்டுவந்தார். அக்ராசனர், சட்டம், ஒழுங்கு என்ற வார்த்தைகளால் அதை ஒப்புக்கொள்ள முடியாதென்று சொல்லிவிட்டு 25 பேர் கையெழுத்திட்டு கொண்டுவந்தால் ஒப்புக்கொள்வதாக சொன்னார். அங்ஙனமே, கையெழுத்து வாங்கிக் கொண்டு போய் கொடுத்தும் அக்ராசனாதிபதி ஒரேயடியாய் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டதைக் கவனிக்க, அக்ராசனர் ஏதோ மயங்கிபோனார் என்றுதான் கொள்ளவேண்டும். ஸ்ரீமான்கள். நாயக்கர், ஆரியா போன்றவர்கள் வெகு வருத்தத்துடன் வெளியேறும்படி அக்கிராசனர் நடந்து கொண்டது வருந்தத்தக்கது''.........

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

## காஞ்சீபுரம்

### பிராமணரல்லாதார் மகாநாடு.

வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானம்.

(29—11—25 பத்திரிகையின் தொடர்ச்சி)

—o—

ஸ்ரீமான். எம். ராமபத்திர உடையார்

இம்மகாநாடு கூட்டியது எந்த வகுப்பாரிடமும் தோஷங்கொண்டு கூட்டியதல்ல. நாட்டில் பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார் என்னப்படுவோர், ஆகிய வகுப்பாருக்குள் காங்கிரசிலானாலும் சரி, வேறு விவகாரங்களிலானாலும் சரி ஒருவருக்கொருவர் மனக்கசப்பும், துவேஷமும் இருப்பதை யாரும் மறைக்க முடியாது. அது ஒழிந்தாலல்லாது நமக்குள் ஒற்றுமை ஏற்படுவது முடியாத காரியம். ஆகையால் எல்லோருக்குள்ளும் நிரந்தர ஒற்றுமை ஏற்படவே ஒரு காரியம் செய்ய நாம் எல்லோரும் இங்கு கூடியிருக்கிறோம். எல்லோருக்குள்ளும் ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால், அவரவர்கள் உரிமையை அவரவர்களுக்கு அளித்தாக வேண்டும். உனக்காக நான் சாப்பிடுகிறேன், என்று சொன்னால் யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். முஸ்லீம்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவமளிக்க லக்னௌ ஒப்பந்தப்படி காங்கிரஸ் ஒப்புக்கொண்டு அமுலில் வந்ததால்தான் நமக்கும் அவர்களுக்கும் ராஜீய கிளர்ச்சியில் கலகமில்லாமல் இருக்கிறது. இதை வெளியில் எடுத்துச் சொன்னால் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டார்கள் என்று சிலபேர் சூழ்ச்சி செய்து முடிவைக்கப் பார்க்கிறார்கள். இந்த சூழ்ச்சி, துவேஷத்தை வளர்க்கத்தான் உதவுமே அல்லாமல் யாதொரு நன்மையையும் தராது. ஜஸ்டிஸ் கட்சி என்றால் என்ன கெடுதி? அவர்களும் ஒரு காலத்தில் காங்கிரசில் இருந்தவர்கள் தானே.

இன்று இங்கு கூடியிருக்கும் ஸ்ரீமான்கள். ஷண்முகம் செட்டியார், ராமலிங்கம் செட்டியார், ஒ. கந்தசாமி செட்டியார், இன்னும் பலரும் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தவர்கள் தானே. காங்கிரசில் இல்லாதவர்கள் இப்போது புதிதாய் எத்தனை பேர் காங்கிரசில் வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஆகையால் சம உரிமை கேட்பது துவேஷமாகாது. சம உரிமை கொடுத்து விடுவோமானால், நம் நாட்டில் கட்சிப் பிளவுகளே இருக்காது. ஜஸ்டிஸ் கட்சி கூட மறைந்து போகும். ஸ்ரீமான்கள். ஒ. கந்தசாமி செட்டியாரும், சிங்காரவேலு செட்டியாரும் வக்கீல் வாதம் பேசுகிறார்களே ஒழிய அனுபவத்திற்கான ஒன்றையும் அவர்கள் பேசவில்லை. ஆகையால் பரந்த நோக்கத்துடன் ஒவ்வொருவரும் நிலைமை கவனித்து ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் உரிமையை கொடுக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

" தேசத்தின் முன்னேற்றத்தை உத்தேசித்தும், தேசிய ஒற்றுமையை உத்தேசித்தும் அரசியல் சம்மந்தமான சகல பதவிகளிலும் இந்து சமூகத்தில் பிராமணர்—பிராமணரல்லாதார், தீண்டாதார் என்போர் ஆகிய இந்த மூன்று சமூகத்தாருக்கும் அவரவர் ஜனத்தொகையை அனுசரித்து பிரதிநிதிஸ்தானம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமாய் மாகாண மகாநாட்டை கேட்டுக் கொள்வதோடு இத்தீர்மானத்தை மாகாண மகாநாடு மூலமாய் காங்கிரசையும், வலியுறுத்தும்படி தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானத்தை, பிரேரேபித்துப் பேசியதாவது:—

நாம் ஒவ்வொருவரும், சுயராஜ்ஜியம் அடைய பாடுபடுவதாய் சொல்லுகிறோம், அதற்காக எவ்வளவோ கஷ்டத்தையும் அனுபவிக்கிறோம் சுயராஜ்யம் கிடைத்தால் அதுபொதுமக்கள் ராஜ்யமாயிருக்க வேண்டாமா? நாட்டின் தற்காலநிலைமையை ப்பார்த்தால், சுயராஜ்யமென்பது பிராமண ராஜ்யம்தான் என்னும் பயம், இப்போது மக்களிடை உண்டாகி வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சி புரிகிற இக்காலத்திலேயே, மனிதர்களைத்தெருவில் நடக்கவிடக்கூடாது குளம் குட்டைகளில் தண்ணீரெடுக்கவிடக்கூடாது என்னும், பல கொடுமைகள் நடைபெருகிற போது ராஜ்ய அதிகாரம் ஒருவகுப்பார் கைக்கேவந்து விடுமானால் இனி என்ன, கொடுமைகள் செய்ய அஞ்சுவார்களென்று, ஜனங்கள் பயப்படுகிறார்கள். தேச விடுதலைக்கு தியாகம் தேவையாயிருந்த காலத்தில் புறமுதுகு காண்பித்து ஓடிப்போன ஆசாமிகளெல்லாம் எதோ சிலர் செய்த தியாகத்தினால் ஏற்பட்ட பலனை அனுபவிக்க வெட்கமில்லாமல் முன்வந்து சூழ்ச்சிகள் செய்து பலனடைவதை பார்க்கிறபோது இவர்களை எப்படி நம்பமுடியும்? வெட்கங்கெட்டவன் சொந்தக்காரன் என்பது போல் விவஸ்தையற்ற ஒரு கூட்டத்தார் தேசத்திலிருந்துகொண்டு, தேசத்தைப்பாழ்பண்ணிக்கொண்டு வருவதை நாம் பார்த்துக்கொண்டே வருகிறோம். சாதுக்களான ஏழுகோடி ஜனத்தொகைகொண்ட ஒரு பெரிய கூட்டம், மிருகங்களிலும் கேவலமாய் நடத்தப்படுவதையும் பார்த்துவருகிறோம். இப்படி ஏனிருக்கவேண்டும்? அந்தந்த கூட்டத்திற்கு தகுந்த அளவு, அவரவர்களுக்கு அரசியல் முதலிய உரிமைகளை ஒதுக்கிவைத்து விடுவோமேயானால், சாதுக்களெல்லாம் மிருகங்களாகவும், அயோக்கியர்களெல்லாம் சுவாமிகளாகவும் ஆகி விடமுடியுமா? கட்டுதிட்ட அளவில்லாததனால், கையில் பலத்தவன் காரியமென்பதுபோல், ஏமாற்ற சக்தியுள்ளவனும், செல்வாக்குள்ளவனும், மேலேவந்துவிடுகிறான். இதனால் ஒருவருக்கொருவர், பரஸ்பர நம்பிக்கையில்லாமலும், ஒற்றுமையில்லாமலும், இவர்களை எப்படி ஏமாற்றலாமென்பதே ஒருகூட்டத்தாருடைய ஜென்மக் கூறாகவும், இவர்கள் தந்திரத்திலிருந்து எப்படி தப்புவதென்பது மற்றக்கூட்டத்தாருடைய கவலையாகவும் போய்விடுகிறது. இந்தநிலைமை, அரசாட்சி புரிபவர்களுக்கு வெகு அனுகூலமாய் ஏற்பட்டுப்போய்விடுகிறது. அதோடுமாத்திரமல்லாமல், அரசாங்கத்தை நடத்துவிக்க வகுப்புக்கு வகுப்பு போட்டி போட்டுக்கொண்டு, ஒற்றர்களாகவும், அடிமைகளாகவும் அரசாங்கத்தையே நாடுவதாய் விடுகிறது. இக்குணங்கள் நமது நாட்டை விட்டு அகலவேண்டுமானால், ஒருவகுப்புக்கு மற்றொரு வகுப்பு நம்பிக்கை ஏற்படும்படி ஒருவர் பாத்தியத்தில் மற்றொருவர் பிரவேசிக்காதபடி பந்தோபஸ்து ஏற்பட்டுப்போக வேண்டும். அவ்வித பந்தோபஸ்துதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமென்பது. நான் பிரேரேபித்திருக்கிற தீர்மானத்தில் இந்த தத்துவம் தான் அடங்கியிருக்கிறது. இது இப்பொழுது மாத்திரம் ஏற்பட்டதல்ல. நீண்டநாளாகவே இக்கிளர்ச்சி நமது நாட்டில் ஏற்பட்டிருந்தாலும் எப்படி யெப்படியோ அதை ஒரு வகுப்பார் கட்டுப்பாடாய் சூழ்ச்சிகள் செய்து சமயத்திற்கேற்றவாறு நடந்து பாமரஜனங்களை சுவாதீனப்படுத்திக்கொண்டு, வெளிக்கு தெரியாமல் அடக்கிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால், நீங்களெல்லோரும் நன்றாய் யோசித்து பார்க்கவேணுமாய் கேட்டுக்கொள்கிறேனென்று பேசி முடித்தார்.

ஸ்ரீமான். தண்டபாணிப் பிள்ளை

இத்தீர்மானத்தை ஆமோதிக்கையில், இத்தீர்மானமானது, எந்த ஜாதியாருக்காவது எந்த வகுப்பாருக்காவது விரோதத்திற்காக கொண்டுவரப்பட்டதல்ல. இப்படி ஒரு தீர்மானம் நமக்குள் இல்லாததால் ஒருவகுப்பாரை ஒருவகுப்பார் அடக்கி ஆதிக்கம்பெற இடமேற்பட்டு விடுகிறது. தாழ்ந்த ஜாதியார் என்றொரு ஜாதியார் இருப்பதற்கு காரணமே இப்படி ஒரு தீர்மானமில்லாததால்தான். பிராமணரல்லாதார் பிற்பட்ட வகுப்பாராயிருப்பதற்குக் காரணம் இப்படி ஒரு தீர்மானமில்லாததால் தான். பிராமணர்களே எல்லாவற்றிற்கும் மேலானவர்கள் என்றும் அவர்களுக்கே எல்லா ஆதிக்கமுமிருக்கவேண்டுமென்றும், அவர்கள் ஆசைப்படுவதும் அதற்கேற்றபடி சமயத்திற்கு தகுந்தாப்போல் நடந்து ஜனங்களை ஏமாற்றுவதும் தேசம் அடிமையாயிருப்பதும் இப்படி ஒரு தீர்மானமில்லாததேதான். ஆதலால், இந்த தீர்மானம் மிகவும் அவசியமானது என்பதற்கு ஸ்ரீமான். நாயக்கர் எவ்வளவோ காரணங்களை உங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார். வெள்ளைக்காரர் எப்படி தங்கள் ஜாதி இறுமாப்பினால் தங்களுக்கென்று சகல காரியங்களிலும் ஒதுக்கி வைத்துக் கொள்ளுகிறார்களோ, அது போலவே நமது நாட்டில் பிராமணர்களும் தங்கள் ஜாதி இறுமாப்பால், தங்களுக்கென்று தனிப்படுத்தி வைத்துக் கொள்ளுகிறார்கள். வெள்ளைக்காரருக்கென்று ரயில் வண்டிகளில், இடம் ஒதுக்கி வைத்திருப்பதை சட்டசபை முதலிய இடங்களில் பிராமணர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். ஆனால் பலகாரக்கடை, ஓட்டல், கோவில் முதலிய இடங்களில் பிராமணர்கள் தங்களுக்கென்று தனி இடம் ஒதுக்கி வைத்துக் கொள்ளுகிறார்கள். தென்னாப்பிரிக்காவில் வெள்ளைக்காரர்கள் இந்தியர்களை தெருவில் நடக்கக் கூடாது என்பதற்கு இந்த பிராமணர்கள் எவ்வளவு கூச்சல் போடுகிறார்கள். ஆனால் கல்பாத்

தியில் பிராமணரல்லாதார்களைத் தெருவில் நடக்கக்கூடாது என்பதற்கு 144 தடை உத்திரவு சம்பாதிக்கிறார்கள் தங்களைத்தவிர மற்றவர்களை சூத்திரர்கள் என்றும் தீண்டாதார் என்றும் கூப்பிடுகிறார்கள். ஏன்? பிராமணரல்லாதாருக்கும் தீண்டாதார் என்போருக்கும் பொதுவாழ்வில் இன்ன இன்ன உரிமை என்று ஏற்படாததால்தான். ஆதலால் அவரவர்கள் உரிமை அவரவர்களுக்கு அளிக்கப்பட ஒருதீர்மானம் ஏற்பட்டுப் போகவேண்டும். இத்தீர்மானம் கொண்டு வந்த ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கரைப்பற்றியும், ஸ்ரீமான் எஸ். ராமநாதனைப் பற்றியும் நீங்கள் எந்தவித சந்தேகமும் கொள்ள இடமில்லை. அவர்கள் சுயநலத்திற்கென்று இந்த தீர்மானம் கொண்டுவரவில்லை. அவர்கள் தேசாபிமானமும் தியாகமும் நீங்கள் அறிந்தது தான். அல்லாமலும், மகம்மதியர்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் நாம் பிரதிநிதித்வம் கொடுக்க சம்மதித்து விட்டோம் என்று சொல்லுகையில், ஜனாப் சென்னை ஷாபிமகமது குறுக்கிட்டு மகமதியர்களுக்குக்கூட வகுப்புவாரிபிரதிநிதித்வம் வேண்டியதில்லை என்றும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தேசத்திற்கு நல்லதல்லவென்றும், வகுப்புவாரிபிரதிநிதித்துவம் இல்லாமலேதான் சென்னை கார்ப்பரேஷனில்தான கமிஷனரானதாகவும், இந்து ஓட்டர்கள் தான் தனக்கு பெரும்பாகம் ஓட்டு செய்ததாகவும் சொல்லிக் கொண்டிருக்கும் போது, ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை இத்தீர்மானம் இந்துக்களுக்குள் பிராமணர், பிராமணரல்லாதார் தீண்டாதார் என்போர் ஆகிய மூன்று வகுப்பாரை மாத்திரம் பொறுத்ததென்றும் முன்னமேயே வகுப்புவாரி பிரதிநிதித்துவம்பெற்றுக்கொண்டமுகமதியசகோதரர்கள் இத்தீர்மானத்தில் கலப்பது சரியல்லவென்றும் சொன்னார். அங்குள்ள சென்னை சினிவாசய்யங்கார் சிஷ்யர்களான இரண்டொருவர் எழுந்து பெருத்த குரலோடு மகமதியர் இத்தீர்மானத்தில் கலக்கக்கூடாது என்று சொன்னது தப்பு என்றும் அதைப் பின் வாங்கிக் கொள்ளவேண்டும் என்றும் சத்தம் போட்டார்கள். அவ்வமயம் ஸ்ரீமான். சென்னை பாவலர் என்கிற ஒருவர் இது ஜஸ்டிஸ் கட்சியின் சூழ்ச்சி என்றும் ஜனங்கள் ஏமாந்துபோகக்கூடாது என்றும் சத்தமாய்ச்சொன்னார். ஸ்ரீமான் சென்னை ஜயவேலு எழுந்து தான் பேசவேண்டும் என்று முன்வந்து நின்றுகொண்டு மேலேகாரியம் நடக்கவொட்டாமல் தடுத்தார். கூட்டத்தார் அவரை உட்காரும்படி செய்தபின் பலர் பேசவேண்டுமென்று சீட்டுகள் அனுப்பினார்கள். ஸ்ரீமான். நாயக்கர் மணி 8½ ஆகிவிட்டதாலும் விஷயாலோசனை கூட்டம் 9-க்கு போடப்பட்டிருந்ததாலும் நாளை ஒத்திப்போடுவது நலம் என்றார். அதையேற்று, பலர் பேசவேண்டியதை முன்னிட்டும் பிராமணரல்லாத தலைவர்கள் கலந்து ஒரு தீர்மானம் செய்து கொண்டால் நலமாயிருக்குமென்றும், அக்கிராசனர் யோசனை செய்து கூட்டத்தை மறுநாள் காலை 8 மணிக்கு பிரதிநிதிகள் தங்கி இருக்கும் இடமாகிய ஜவுளிக்கடை சத்திரத்தில் கூடும் என்று அறிவிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது. அதே சமயத்தில் ஸ்ரீமான். சென்னை சிங்காரவேலு செட்டியாரை அக்கிராசனராக வைத்துச் சிலர் பேசப்போவதாக ஏற்பாடு செய்தார்கள். மாயவரம் ஸ்ரீமதி. ராமாமிர்தம்மாள் எழுந்து ஜனங்கள் விஷயாலோசனை சபைக்கு போகவேண்டுமென்று கலைந்து போனபிறகு, நீங்கள் 4 பேர் சேர்ந்து கொண்டு மீட்டிங்கு பேசுவது ஒழுங்கல்லவென்று சொல்லி கூட்டத்தை கலைத்து விட்டார். பிறகு சென்னைக் கூட்டம் தானாகவே கலைந்து போய் விட்டது.

## இரண்டாம் நாள் நடவடிக்கை.

முதல் நாள் சொன்னபடிக்கு இரண்டாம் நாள் காலை மகாநாட்டு பிரதிநிதிகள் தங்கியிருந்த சத்திரத்தில் மகாநாடு காலை 8 மணிக்கு ஸ்ரீமான். T. A. ராமலிங்கம் செட்டியார் அக்கிராசனத்தில் கூடிற்று. முதல் நாள் கூட்டத்தில் பிராமணர்களும் இடை இடை கலந்து கொண்டு கை தட்டவும், கூச்சல் போடவுமான சில இழிவான காரியங்கள் செய்ததால், இரண்டாம் நாள் கண்டிப்பாய் அவர்கள் கூட்டத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று சொல்லப்பட்டுவிட்டதால் கலகம் செய்யவும், செய்விக்கவும் இடமில்லாமல் போய்விட்டது. அக்கிராசனர் எழுந்து நேற்று கூட்டத்திற்கு வந்த தலைவர்களும், இன்று புதிதாய் வந்த தலைவர்களும் சேர்ந்து யோசித்து ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது, அதை இக்கூட்டத்தார் யோசித்து முடிவு செய்து ராஜீய மகாநாடு விஷயாலோசனை கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டு தீர்மானத்தைப் பிரேரேபிக்க அனுமதித்தார். பின்னர்,

### ஸ்ரீமான் சக்கரை செட்டியார்.

"காங்கிரஸ் பிராமணரல்லாதார் அடங்கிய இக்கூட்டம் எல்லாருக்கும் சமமான பிரஜா உரிமை ஏற்பட வேண்டும் என்கிற லக்ஷியத்திற்காக உழைத்து வருகிறது என்பதை அனுபவத்தில் கொண்டு வரவும். நம்மாகாணத்தில் உள்ள வகுப்பு வேற்றுமைகளை ஒழிக்கவும், சட்டசபை முதலிய ஸ்தாபனங்களுக்கு பிராமணரல்லாதார் 100-க்கு 75 வீதமாவது ஸ்தானம் பெறவேண்டும் என்றும், இதை அமுலில் கொண்டுவர ஏற்பாடு செய்வதற்கு பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு போர்ட் நியமிக்க வேண்டுமென மகாநாட்டை கேட்டுக்கொள்ளுகிறது" என்றும் பிரேரேபித்துப் பேசியதாவது:—

நாம் காங்கிரசை பலப்படுத்தவும் பல வகுப்பாருக்குள்ளும் ஒற்றுமையையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணவுமே இத்தீர்மானம் கொண்டுவந்திருக்கிறோம். சமூக துவேஷங்களும் அவநம்பிக்கையும் இப்போது இல்லையென்று யாரும் சொல்லமாட்டார்கள். ஆதலால் அதற்குவேண்டிய பரிகாரம் செய்யாமல் சுயராஜ்யத்திற்கு பாடுபடும் எவ்வித பிரயாசையும் கைகூடாது என்று சொன்னார்.

### ஸ்ரீமான் ராமபத்திர உடையார்.

இதை ஆமோதித்து இது எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றே இம்மாதிரி கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றும், இது சரியானபடி பலன் தராவிட்டால் பிறகு வேறு ஏற்பாடு செய்யலாம் என்றும் சொன்னார்.

### ஸ்ரீமான் ஜெயவேலு.

எழுந்து எங்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம்கூட வேண்டாம் எங்களைத் தெருவில் நடக்கவும், சுவாமியைக்கும்பிடவும் இடம் கொடுத்தால் போதும் என்று சொன்னார். பின்,

### ஸ்ரீமான். கிருஷ்ணசாமி பாவலர்

எழுந்து 100 க்கு 75 போதாதென்றும் 100க்கு 90 ஸ்தானங்களுக்கு மேல்கிடைக்க வேண்டியது அவசியமென்றும், ஆனாலும் 90-ஆவது இப்போது கிடைக்கும்படி இத்தீர்மானத்தை திருத்தவேண்டும் என்றும் சொன்னார். அசல் தீர்மானத்தைப்பிரேரேபித்த ஸ்ரீமான். சக்கரைசெட்டியார் சபையோரின் நோக்கம்தெரிந்து திருத்தத்தை ஒப்புக்கொண்டார். ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளையும், திருத்தத்தை ஒப்புக்கொள்வதாய்ச் சொன்னார். ஸ்ரீமான். வி. வி. நாயுடு இத்தீர்மானம் சட்டசபை ஸ்தலஸ்தாபனம் முதலிய எல்லாபதவிகளுக்கும் ஏற்றதுதானே என்று கேட்டார். அக்கிராசனர் ஆம் என்று சொன்னபின் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேறிற்று. உடனே,

### ஜனாப் சென்னை அமீத்கான்.

90 ஸ்தானங்களில் 30 ஸ்தானங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு ஒதுக்கிவைக்க வேண்டும் என்று ஒருதீர்மானம் பிரேரேபித்தார். ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவர்கள் ஜனத்தொகைக்குத்தகுந்தபடி ஒதுக்கவேண்டும் என்று சொன்னார் ஸ்ரீமான் ஓ.கந்தசாமி செட்டியாரும், ஸ்ரீமான். ஜெயவேலும், ஸ்ரீமான். சொக்கலிங்கம் பிள்ளையும் இதுவே போதாது என்றும், ஆனபோதிலும் 30-க்கு குறையக்கூடாது என்றும் சொன்னார்கள். ஸ்ரீமான். வி.வி.நாயுடு தேர்தலில் தாழ்த்தப்பட்ட வகுப்பார் கிடைக்காவிட்டால் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் உரிமைகளை ஒப்புக்கொள்ளுபவரை நிறுத்த வேண்டும் என்று சொன்னார். பணம் செலவு செய்து ஓட்டு வாங்கும் இக்காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் தேர்தலில் பணம் செய்யக்கூடுமா என்று ஒருவர் சொன்னார். ஸ்ரீமான். சீனிவாசய்யங்காரைப்போல் யாராவது வர வேண்டும் என்று ஒருவர் சொன்னார். சென்னையில் ஓட்டு 1க்கு நாலு ரூபாய் செலவாகவில்லையா என்றார். மற்றவர் 16 ரூ செலவாகவில்லையா என்றார். பின்னர்,

### ஸ்ரீமான் C. R. ரெட்டி

எழுந்து நமது தீர்மானங்கள் அமுலுக்கு வரவேண்டும் என்றும், அமுலுக்கு வராவிட்டால் சிரிப்பார்கள் என்றும், நான் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களிடம் மிகவும் அனுதாபம் கொண்டவன் என்றும், தாழ்த்தப்பட்டவர்கள் தேர்தலில் போட்டி போட சக்தியற்றவர்கள், பணம் செலவு செய்ய அவர்களுக்கு சவுகரியமில்லை என்றும், அவர்களை அனாவசியமாய் கஷ்டத்தில் விட்டுவிடக்கூடாது என்றும் சொன்னார். பின்னர் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது. அக்கிராசனர் இத்தீர்மானங்களை ராஜீய மகாநாட்டில் பிரேரேபித்து நிறைவேற்றுவிக்க சபையார் சம்மதம் பெற்று மகாநாடு விஷயாலோசனைக்கமிட்டிக்கு கொடுத்தனுப்பப்பட்டு அக்கிராசனாதிபதிக்கு வந்தனமளித்து கூட்டம் கலைந்தது.

---

# காஞ்சீபுரம் மகாநாட்டின் விஷயாலோசனை கமிட்டியின் கூற்று.

---

விஷயாலோசனைக்கமிட்டியில் பிராமணரல்லாதார் மகாநாட்டைப்பற்றியும், அது சம்மந்தமான தீர்மானங்களைப்பற்றியும் பலர் பலவாறு எழுதுகிறபடியால் அதை விளக்கவேண்டியது அவசியமாகிறது:—

பிராமணரல்லாதார் மகாநாட்டின் தீர்மானங்களை எடுத்துக்கொண்டு ராஜீயமகா நாட்டு விஷயாலோசனை சபைக்கூட்டத்திற்குப் போனதில் அது சமயம் அவ்விடம் வகுப்புவாரிபிரதிநிதித்வ தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டு தீர்மானத்தின்மேல் பேச்சுகள் நடந்துகொண்டிருந்தது. அதே சமயம், பிராமணரல்லாதார் மகாநாட்டு தீர்மானத்தை அக்கிராசனர் கையில் கொடுத்தவுடன் அக்கிராசனர் அதைப்படித்தார். உடனே ஸ்ரீமான். பாவலர் எழுந்து பிராமணரல்லாதார் மகாநாட்டு தீர்மானத்தைத் தான் பிரேரேபிப்பதாய்ச் சொன்னார்.

ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அதை ஆமோதிப்பதாய்ச் சொன்னார். அக்கிராசனர், ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கரைப் பார்த்து இரண்டு தீர்மானங்கள் இருக்கிறதே, இதைப் பற்றித் தங்கள் அபிப்பிராயமென்னவென்று கேட்டார். ஸ்ரீமான். நாயக்கர், எந்தத் தீர்மானம் நிறைவேறினாலும் எனக்குச் சம்மதம் தான், எப்படியாவது ஒருவரை ஒருவர் ஏமாற்ற வழியில்லாமல் ஒரு அத்து ஏற்பட்டுப் போகவேண்டும் என்று சொல்லி அதன் அவசியத்தைப் பற்றியும் சொன்னார். பிறகு முதல் தீர்மானத்தை அக்கிராசனாதிபதி ஓட்டுக்கு விட்டார்.

பிராமணரல்லாதார் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தைக் கவுரவப்படுத்த வேண்டும் என்று ஸ்ரீமான். நாயக்கர் சொன்னதால் முதல் தீர்மானமாகிய வகுப்புவாரி தீர்மானத்திற்கு பெரும்பான்மையோர் ஓட்டுக் கொடாமல் போனதால் 4, 5 ஓட்டு வித்தியாசத்தில் அது தோற்றுப்போயிற்று. உடனே ஸ்ரீமான். சீனிவாசய்யங்கார், ஸ்ரீமான். பாவலரைப் பார்த்து உங்களுடைய தீர்மானத்தை வாபீஸ் செய்து கொள்ளுங்கள் என்று சொன்னவுடன் ஸ்ரீமான். பாவலர் தன் தீர்மானத்தைப் பின் வாங்கிக்கொள்வதாய் சொன்னார்.

ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை எழுந்து பிரேரேபணை செய்த ஸ்ரீமான். பாவலர் பின் வாங்கிக் கொண்டாலும், ஆமோதித்த எனக்கு அதை வலியுருத்த பாத்தியமிருக்கிறது; ஆதலால் அதை ஓட்டுக்குத்தான் விடவேண்டும் என்று சொன்னார். அக்கிராசனர்:— பிரேரேபித்தவர் பின் வாங்கிக் கொண்டதால் உங்களுக்கு அதைக் கட்டாயப் படுத்த உரிமையில்லை என்று சொன்னார். அப்போது சபையில் சிலர் எழுந்து அக்கிராசனாதிபதி அப்படி செய்வது ஒழுங்கல்லவென்றும் சொன்னார்கள். அது சமயம் ஸ்ரீமான். சீனிவாசய்யங்கார் அக்கிராசனாதிபதி தனது ரூலிங் கொடுத்தாய் விட்டதால் யாருக்கும் ஆக்ஷேபிக்க உரிமையில்லை என்று சொன்னார். இடையில் ஸ்ரீமான். பி. வரதராஜுலு நாயுடு எழுந்து,

"தேசிய ஒற்றுமையையும் பற்பல சமூகத்தாருடைய நன்மைகளையும் உத்தேசித்து கான்பூர் காங்கிரசில் சட்டசபைத்தேர்தல்களை காங்கிரஸ் நடத்தும்படி தீர்மானித்த பிறகு, நமது மகாணத்தில் அத்தேர்தல்களை நடத்தும் பொருட்டு ஒரு தேர்ந்தெடுக்கும் கமிட்டியை நியமித்து நடத்திவைப்பது அவசியமாகும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என்று பிரேரேபித்தார். அக்கிராசனர், ஸ்ரீமான். நாயக்கரைப்பார்த்து இத்தீர்மானத்தை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா என்று கேட்டார். ஸ்ரீமான் நாயக்கர் எழுந்து பிராமணரல்லாதார் மகாநாட்டு தீர்மானத்தை நீங்கள் ஓட்டுக்குவிடுவீர்கள் என்று நம்பியே நான் வகுப்புவாரி தீர்மானத்தை வலியுருத்தவில்லை. இங்குள்ள பிரதிநிதிகளும் பிராமணரல்லாதார் மகாநாட்டு தீர்மானத்திற்கு ஓட்டுசெய்யலாம் என்று கருதியே வகுப்புவாரி தீர்மானத்திற்கு ஓட்டு கொடுக்கவில்லை. அதினால்தான் 4, 5 ஓட்டு வித்தியாசத்தில் அத்தீர்மானம் போய்விட்டது இல்லாவிட்டால் அது பெருவாரி ஓட்டுகளால் நிறைவேறியிருக்கும், இப்போது அதை ஒழுங்குத்தவறு என்று தாங்கள் சொல்வது ஒழுங்கல்ல, ஸ்ரீமான் பாவலர் அதை வாபீஸ் செய்து கொள்ளுவார் என்று தெரிந்திருந்தால் வேறு ஒருவர் பிரேரேபித்திருப்பார் என்று சொன்னார்.

ஸ்ரீமான் பாவலர் எழுந்து நான் பிரேரேபிக்கவில்லையென்றும், அப்படி ஒரு தீர்மானமிருப்பதாக அக்கிராசனாதிபதிக்கும் சபைக்கும் தெரிவிக்கவே எடுத்துச்சொன்னேன் என்றும் சொன்னார்.

## ஸ்ரீமான். நாயக்கர்.

அப்படியானால் ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளை அதை ஆமோதித்தபோதும், நானும் ஸ்ரீமான். பாவலர் தீர்மானம் ஒன்று இருக்கிறது என்று சொன்னபோதும், நீங்கள் ஏன் சும்மாயிருந்தீர்கள்? அல்லாமலும், ஒருவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டு அத்தீர்மானத்தை பின் வாங்கிக் கொள்ளுகிறேன் என்று ஏன் சொன்னீர்கள் என்று கேட்டார்.

அதற்கு ஸ்ரீமான். பாவலர் சபையோரும், அக்கிராசனரும், நீங்களும், நான் பிரேரேபித்ததாய் நினைத்துக் கொண்டதால், நான் பின் வாங்கிக் கொண்டேன் என்று சொன்னார்.

பிறகு ஸ்ரீமான் நாயக்கர் அக்கிராசனரைப் பார்த்து அத்தீர்மானத்தை ஓட்டுக்கு விடுவதற்கு தங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் இப்பொழுதாவது பிரேரேபிக்கிறேன் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார்.

அக்கிராசனர் ஸ்ரீமான். நாயக்கரைப் பார்த்து உங்கள் பிரேரேபணையை எழுதிக் கொடுங்கள் என்று சொன்னார்.

ஸ்ரீமான். நாயக்கர் அக்கிராசனரைப் பார்த்து என் பிரேரேபணையைத் தங்கள் கையில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே அது தான் என்று சொன்னார்.

ஸ்ரீமான். சீனிவாசய்யங்கார் அக்கிராசனருக்கு அத்தீர்மானம் நாயக்கர் கொடுத்ததல்ல. வேறொருவர் கொடுத்தது என்று சொல்லுங்கள் என்று சொல்லிக்கொடுத்தார். அக்கிராசனர் இதையேற்று இத்தீர்மானம் பிரேரேபணை மூலமாய் என் கைக்கு வரவில்லை, அது ஒரு தகவல் கொடுக்க வந்தது. ஆகையால் அதை நீங்கள் உபயோகப்படுத்திக்கொள்ள முடியாது என்று ஸ்ரீமான் நாயக்கருக்கு சொன்னார்.


ஸ்ரீமான். நாயக்கர் வேறு கடிதத்தில் அத்தீர்மானத்தை, ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளையைக்கொண்டு எழுதிக்கொண்டிருக்கும்போது, அக்கிராசனர் ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டு நிறைவேறிவிட்டதாகச்சொன்னார்.

ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளையால் எழுதப்பட்ட தீர்மானம் உடனே அக்கிராசனரிடம் கொடுத்துப் பிரேரேபிக்கப்பட்டது.

அக்கிராசனர், ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு தீர்மானம் நிறைவேறிவிட்டதால் இத்தீர்மானம் ஒழுங்குத்தவரானதென்று சொல்லி நிராகரித்து விட்டார்.

ஸ்ரீமான். நாயக்கர் அக்கிராசனரைப் பார்த்து இப்படியெல்லாம் ஒருவர் பேச்சைக்கேட்டுக்கொண்டு எங்களை மோசம் செய்வது ஒழுங்காகுமா? தாங்களும், ஸ்ரீமான் நாயுடுவும், இருவருமே சேர்ந்து அய்யங்கார் சூழ்ச்சியில் சிக்கிஎங்களை மோசம் செய்கிறீர்கள். ஆனபோதிலும் பயமில்லை. 4, 5 ஓட்டில் தோற்றுப்போன வகுப்புவாரி தீர்மானத்தை மகாநாட்டில் கொண்டுவரவேனும் அனுமதியாவது கொடுக்கிறீர்களா? அதுவும் இல்லை என்று சொல்லுகிறீர்களா? என்று கேட்டார். அக்கிராசனர் அதற்கு அனுமதி கொடுப்பதில் ஆக்ஷேபனை இல்லையென்றும், முன்னமே அனுமதி கொடுத்தாய் விட்டது என்றும், நகல் தீர்மானங்களில் அது சேர்த்து அச்சடிக்கப்பட்டு வழங்கப்படும் என்றும் சொல்லி பிரேரேபிப்பவர் எஸ். ராமநாதன் என்றும், ஆமோதிப்பவர் ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கர் என்றும் குறித்து கொள்ளப்பட்டது. பின்னர் விஷயாலோசனை கமிட்டி கூட்டம் முடிவடைந்தது.

---



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுமதானே.

குடி அரசு.

குரோதன-ஸு கார்த்திகை-மீ உக-உ

# ஆதி முதற்கொண்டே சூழ்ச்சி.

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பது, நேற்றா? இன்றா?

காஞ்சிபுரம் மகா நாடு நடந்து இரண்டு வாரங்களாகிவிட்டது. மகாநாட்டின் சம்பவங்களும், பழைய கதையாகிவிட்டது. ஆனால், அம்மகா நாட்டின் சம்பவங்களால் ஒவ்வொரு நிமிஷமும் புதிய எண்ணங்களே தோன்றிக்கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டு காங்கிரஸ் ராஜீய நாடகத்தில், பிராமணரல்லாதார்களின் சார்பாக, ஸ்ரீமான்கள். வரதராஜுலு நாயுடு; கலியாணசுந்தர முதலியார், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், ஆகிய இம்மூவர்களின் வேஷமும், விளம்பரங்களுந்தான் அடிக்கடி விசேஷமாய்த் தோன்றும். இம்மூவர்கள் தான் காங்கிரசில் பிராமணரல்லாதாருக்கு உள்ளபற்றுதலுக்கும், காங்கிரஸை பிராமணரல்லாதார் ஆமோதிக்கிறார்கள் என்பதற்கும் ஆதாரமாய் எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள்.

### தென்னிந்திய நல உரிமை கூட்டுறவு சங்கம்.

அதோடு மாத்திரமல்லாமல், காங்கிரஸ் பிராமணராஜ்யம் ஸ்தாபிக்கத்தகுந்த சாதனமென்றும், சுயஆக்ஷி என்பது பிராமண ஆக்ஷிதானென்றும் கருதிய பெரியோர்களான டாக்டர். டி. எம். நாயர் ஸர். பி. தியாகராய செட்டியார் போன்ற தேசாபிமானமும், அநுபவமும் வாய்ந்த பலபெரியோர்களால் சொல்வி, காங்கிரஸை ஒதுக்கி, தென்னிந்திய மக்கள் நலவுரிமைச் சங்கம் என்பதாக ஓர் சங்கத்தைக்கண்டு அதன் மூலமாய் பிராமணரல்லாதார் நன்மைக்கென, ஜஸ்டிஸ், திராவிடன் என்கிற இரண்டு பத்திரிகைகளையும் தோற்றி, தீவிரப்பிரசாரங்களைச் செய்து, அதுகாலையில் பிராமணர்கள் வயப்பட்டுக்கிடந்த பெருவாரியான பல அதிகாரங்களையும், பதவிகளையும் பிராமணரல்லாதார் தங்கள் உரிமைக்குத்தகுந்த அளவு அடையவேண்டும் எனக்கருதி பிரசாரமும் தொடங்கினார்கள்.

### சென்னை மாகாண சங்கம்.

அச்சமயத்தில், ஷை சங்கமும், பிரசாரங்களும், தென்னிந்திய மக்கள் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்லவென்றும், ஏதோ சிலர் அரசாங்கத்தின் வயப்பட்டு அவர்கள் தூண்டுகோலால் நடைபெறுகிற சங்கமென்றும், இதில் பிராமணரல்லாதார் கலந்து கொள்ளக்கூடாது என்றும், தென்னிந்திய பிராமணரல்லாத மக்களுக்கு நன்மைசெய்யவும், வகுப்புவாரி பிரதிநிதித்வ உரிமை அளிக்கவும், சென்னை மாகாணச்சங்கமென்பதாக ஓர் சங்கத்தைத் தோற்றியிருக்கிறோம்; அதில் பிராமணர்கள் யாரும் கலப்பில்லை. அதன் தத்துவமே காங்கிரஸ் மூலமாகச்சுயராஜ்யம் பெறுவதும், பிராமணரல்லாதாருக்கு வகுப்புவாரி பிரதிநிதித்வம் பெறுவதும் தான் முக்கியமானது என்றும், அதின் அக்ராசனாதிபதி திவான் பகதூர் பி. கேசவப்பிள்ளையாகவும். உப அக்கிராசனாதிபதி, ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியோராகவும், காரியதரிசி ஸ்ரீமான். டாக்டர். பி. வரதராஜுலு நாயுடு முதலியோராகவும், இதற்குப்பிரசாரப்பத்திரிகைகள் "இந்தியன் பேட்ரியட்" என்ற ஆங்கிலப்பத்திரிக்கையையும் "தேசபக்தன்" என்கிற தமிழ்ப்பத்திரிக்கையையும், இவற்றிற்கு, திவான்பகதூர், சி. கருணாகரமேனன், திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் ஆகியவர்கள் முறையே பத்திராசிரியர்களாகவும். இருந்து நடந்து வரப்பட்டதோடு, இதன் பலனால் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு, பிராமணரல்லாத பாமரஜனங்களிடத்தில் செல்வாக்கில்லாமற்செய்ததுடன், காங்கிரஸ் தான் தேசவிடுதலைக்குச் சாதனமென்றும், சென்னைமாகாணச்சங்கம் தான் பிராமணரல்லாதாரின் நன்மையைக் கருதக்கூடியது என்றும், சென்னைமாகாணத்திலுள்ள பிராமணரல்லாத மேற்கண்ட முக்கியஸ்தர்கள் தான் தென்னாட்டு பிராமணல்லாதார் பிரதிநிதிகளென்றும், சன்னது கிடைத்தாய் விட்டது.

### வகுப்புவாரி பிரதிநிதித்வம்.

இதோடுமாத்திரமல்லாமல், தென்னிந்திய நலவுரிமைச்சங்கத்தாரும், சென்னை மாகாணச்சங்கத்தாரும் போட்ட வகுப்புவாரிப்பிரதிநிதித்வ கூச்சல்களினால், கிறிஸ்தவர், மகமதியர், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், முதலிய வகுப்பாருக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்வமும், விவசாயிகள், லேவாதேவிக்காரர், இந்திய வியாபாரிகள் ஐரோப்பிய வியாபாரிகள், முதலிய தொழிலாளிகளுக்கு தொழில்வாரி பிரதிநிதித்வமும், தேர்தல்களில் கொடுக்கப்பட்டதோடல்லாமல், பிராமணரல்லாதாருக்கென பல ஸ்தானங்களையும் ஒதுக்கிவைக்கப்பட அரசாங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

### காங்கிரஸில் வகுப்புவாரி பிரதிநிதித்வம்.

இது இப்படியிருக்க, ராஜீய சபைகளான காங்கிரஸ் முதலிய சபைகளிலும் மகமதியர், கிறிஸ்துவர் முதலியோருக்கு வகுப்புவாரி பிரதிநிதித்வம் கொடுக்கவேண்டுமென்று அவர்களோடு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது. இது மாத்திரமேயல்லாமல் காங்கிரஸ் ஸ்தாபனங்களிலும், உதாரணமாக எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும், மகமதியர்களுக்கு இத்தனை ஸ்தானம், கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானம், தீண்டாதாருக்கு இத்தனை ஸ்தானம் இவை நீங்கிய மற்றவர்களுக்கு இத்தனை ஸ்தானம் என மாகாணவாரியாக ஒதுக்கிவைக்கப்பட்டு அந்தப்படி இப்பொழுது காங்கிரஸிலும் அமுலில் நடந்து வருகிறது. இவ்வளவிருந்தும், மேலும் மேலும் இவை போதாதென்றும், இன்னும் சில ஸ்தாபனங்களிலும் வகுப்புவாரி பிரதிநிதித்வம் ஏற்படவேண்டுமென்றும், ராஜீய காங்கிரசிலும், கான்பரன்ஸ்களிலும் கிளர்ச்சிகளும், முயற்சிகளும், செய்துகொண்டே வரப்பட்டிருக்கிறது.

### காக்கிநாடா காங்கிரஸ்.

உதாரணமாக, காக்கிநாடா காங்கிரஸில், ஸ்ரீமான். தாஸ் அவர்களால் கொண்டு வரப்பட்டு, ஸ்ரீமான். ராஜகோபாலாச்சாரியாரால் ஆமோதிக்கப்பட்ட கல்கத்தா பேக்டினாலும் (அது தோற்றதிற்கும் ஒரு காரணம் உண்டு; ஆனால்ரகசியம்.)

டாக்டர். அன்ஸாரி, லாலாலஜபதிராய் முதலியோர்களை இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு வழி காண ஒரு ஏற்பாடு கண்டுபிடிக்கும்படி காக்கினடா காங்கிரசில் ஏற்படுத்திய கமிட்டியினாலும், அதன் குறிப்புகளினாலும் நன்றாய் விளங்கும்.

இன்னமும் தமிழ் நாட்டில் நடந்த மாகாண கான்பரன்ஸ்களின் போதெல்லாம் நடந்த பிராமணரல்லாத தனிக் கூட்டங்களாலும் நன்றாய் விளக்கலாம். அதாவது:—

### 25-வது ராஜீய மாகாண மகாநாடு.

1919-ம் வருடத்தில் திருச்சியில் நடைபெற்ற 25-வது ராஜீய மாகாண கான்பரன்சின்போது, அதே கொட்டகையில் ஸ்ரீமான். சோமசுந்தரபாரதியாரின் அக்ராசனத்தின்கீழ் இதைப் பற்றிப்பேசி ஈரோட்டில் சென்னை மாகாணச் சங்கத்தை நடத்த வேண்டுமென்றும், அதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வதீர்மானத்தை வலியுறுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு அது போலவே தீர்மானமும் நிறைவேறியுமிருக்கிறது.

### 26-வது ராஜீய மாகாண மகாநாடு.

1920-ம் வருடம் திருநெல்வேலியில் நடந்த 26-வது ராஜீய மாகாண கான்பரன்ஸின்போது பிரதிநிதிகள் சாப்பாட்டு விடுதியில் ஸ்ரீமான். ஈ. வி. இராமசாமி நாயக்கருடைய அக்கிராசனத்தின் கீழ் பிராமணரல்லாதார் கூட்டம் ஒன்று கூடி சட்டசபைகள் முதலிய தேர்தல் ஸ்தானங்களுக்கு வகுப்புவாரிபிரதிநிதித்வம் ஏற்படுத்துவதோடு, அரசாங்க உத்தியோகத்திலும் வகுப்பு ஜனசங்கைக்குத் தகுந்தபடி வகுப்புவாரி பிரதிநிதித்வம் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்கிற தீர்மானத்தைக் காலஞ்சென்ற ஸ்ரீமான். சோமசுந்தரம் பிள்ளை, ஸ்ரீமான்கள். வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, தண்டபாணிபிள்ளை மற்றும் திருநெல்வேலி,

ஸ்ரீவைகுண்டம் முதலிய ஸ்தலங்களிலுள்ள சில வக்கீல்களும் ஆகச்சேர்ந்து உடனே விஷயாலோசனைக் கமிட்டிக்கு அனுப்பிய அத்தீர்மானத்தை ஸ்ரீமான். ஈ. வி. ராமசாமி நாயக்கர் பிரேரேபிக்க, ஸ்ரீமான்கள். வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, தண்டபாணிபிள்ளை முதலியோர்கள் ஆமோதிக்க, காலஞ்சென்ற ஸ்ரீமான். எஸ். கஸ்தூரிரெங்கய்யங்கார் எழுந்து விதாசாரம் (Percentage) என்கிற வார்த்தைக்குப் பதிலாக, "போதுமான" என்னும் அர்த்தத்தைக் கொடுக்கத்தகுந்த (Adequately) அடிகுவேட்லி என்கிற பதத்தைப் போட்டுக்கொள்ளும்படி ஒரு திருத்தப் பிரேரேபனை கொண்டு வந்தார். இந்த அடிகுவேட்லி என்ற பதத்திற்கு என்ன பொருள் என்று ஸ்ரீமான்.ராமசாமி நாயக்கர் அம்மகா நாட்டுக்கு அக்கிராசனாதிபதியாயிருந்த இதே ஸ்ரீமான். எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரவர்களைக் கேட்க, அவர் இரண்டும் ஒரே அர்த்தந்தான் ஆனால், பெர்சண்டேஜ் என்பதைவிட அடிகுவேட்லி என்பது நல்ல வார்த்தையென்று சொல்லித் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார். இது சமயம் ஸ்ரீமான். ராஜகோபாலாச்சாரியார் முதலியோர்களும், அக்கூட்டத்தில் ஆஜராகித்தானிருந்தார்கள். அதோடு ராஜாங்க கல்வித்துறைகளில் சமஸ்கிருதக் கல்விப் பயிற்சிக்கு உள்ள யோக்கியதையும்,செய்முறையும் தமிழ் கல்விக்கும் இருக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் ஸ்ரீமான். ராமசாமி நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான். வி. ஓ. சிதம்பரம் பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. ஆனால்,விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் முடிந்ததும் வெளியில் வந்து ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமிநாயக்கர் சில ஆங்கிலம் படித்தவர்களைக் கண்டு அடிக்குவேட்லி என்பதற்கும், பர்செண்டேஜ் என்பதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டபோது, அவர்கள் அடிக்குவேட்லி என்பது இருபொருள் கொண்டதென்றும், அதாவது யோக்கியதைக்குத் தகுந்த என்கிற பொருள்கூட கொள்ளலாமென்றும், பர்சண்டேஜ் என்கிற வார்த்தைதான் மிகத்தெளிவானது என்றும் சொன்னார்கள். பிறகு மகாநாட்டில் இத்தீர்மானம் வரும்போது பெர்சன்டேஜ் என்கிற வார்த்தையையே போட்டுக்கொள்ளவேண்டும் என்று, ஸ்ரீமான்கள். நாயக்கரும், தண்டபாணி பிள்ளையும் அக்ராசனர் ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்காரிடம் சொன்னார்கள். அவரும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டார். கடைசியாக, மகாநாட்டில் இது தவிர மற்றத்தீர்மானங்கள் முடிந்தவுடன் அக்ராசனாதிபதி எழுந்து திடீரென்று தமது முடிவுரையை ஆரம்பித்து விட்டார். ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளை தன்னுடைய வகுப்புவாரி பிரதிநிதித்வ தீர்மானம் என்ன ஆயிற்றென்று அக்ராசனரைக் கூட்டத்தில் கேட்டார். அக்ராசனர் ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் அது பொது நன்மைக்கு விரோதமான தீர்மானமானதால் அவற்றை ஒழுங்குத்தவறானதென்று தீர்மானித்து விட்டதாகச்சொல்லிவிட்டார். உடனே ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை எழுந்து, விஷயாலோசனைக்கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட, தன் தீர்மானம் இங்கு எப்படி ஒழுங்குத் தவறு என்று கேட்டார். அப்போது, அங்கிருந்த பிராமணர்கள் ஸ்ரீமான். பிள்ளையை உட்காரும்படி கூச்சல் போட்டு அடக்கிவிட்டார்கள். கடைசியாக முடிவுரையில் ஸ்ரீமான். அய்யங்கார், காஞ்சிமகாநாட்டில் ஸ்ரீமான். முதலியாரைக்கொண்டு சமாதானம் சொல்லச் சொன்னது போல் வருத்தப் படுவதாக பொய் வேஷம் போட்டு மறைத்து விட்டார்.

### 27-வது ராஜீய மாகாண மகாநாடு

பின்னர் 1921-ம் வூ தஞ்சையில் நடந்த 27-வது தமிழ் மாகாண மகாநாட்டில் கோயமுத்தூர் ஜில்லா பிரதிநிதிகள், கொட்டகையில் ஸ்ரீமான். சர்க்கரை செட்டியார் அக்கிராசனத்தில் தமிழ்நாடு பிராமணரல்லாதார் கூட்டம் ஒன்றுகூடி வகுப்புவாரிபிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசி, ஸ்ரீமான்கள். சென்னை சிங்காரவேலு செட்டியார், கல்யாணசுந்திர முதலியார், சர்க்கரை செட்டியார், வரதராஜுலு நாயுடு, ராமசாமி நாய்க்கர் ஆகியவர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று நியமித்து வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு வேண்டிய வேலை செய்யவும், ஜஸ்டிஸ் கட்சிக்கு போட்டியாய் ஆரம்பித்த சென்னை மாகாண மகாநாட்டை கூட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

### 28-வது ராஜீய மாகாண மகாநாடு.

1923-ம் வூ திருப்பூரில் கூடிய 28-வது மாகாணமகாநாட்டிலும் நாடார்கள் முதலியோர்க்கு ஆலயப்பிரவேசம் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கு விரோதமான சாஸ்திரங்களையும், பழைய ஆசாரவழக்கங்களையும் மாற்றவேண்டும் என்றும் ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு, விஷயாலோசனைக் கூட்டத்தில் தீர்மானமானதை வெளி மகாநாட்டில் பிரேரேபிக்க முடியாதபடி பல பிராமணர்கள் செய்தும், கடைசியாக பெரிய தகராரின்பேரில் ஸ்ரீமான்கள். கலியாணசுந்திர முதலியார் பிரேரேபிக்க, ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஆமோதிக்க அதின் பேரில் ஸ்ரீமான்கள். எஸ். சத்தியமூர்த்தி, மதுரை ஏ. வைத்தியநாதய்யர், கும்பகோணம் பந்துலுவய்யர் முதலியோர் ஆக்ஷேபித்து கூச்சல்களையும், கலகத்தையும் உண்டாக்கி எப்படியோ அத்தீர்மானத்தை அப்படியே ஓட்டுக்கு விடாமல், அதன் ஜீவநாடியை எடுத்து விட்டு ஒரு சொத்தைத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அது சமயம் ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு மதில்மேல் பூனை போலவே நடந்து கொண்டார் என்கிற பழியும் அவருக்கு வந்தது.

### மதுரை-இராமநாதபுரம் மகாநாடு.

1923-ம் வருஷத்திய மதுரை-இராமநாதபுரம் மகாநாட்டிலும் பிராமணர்-பிராமணர் அல்லாதார் தகரார் ஏற்பட்டது ஸ்ரீமான். சோமசுந்திர பாரதியார் இதில் சிக்கிக்கொண்டு வெகுபாடுபட்டார்.

பிறகு 1923-ம் வருஷத்தில் திருச்சியில் டாக்டர் ராஜன் வீட்டில் கூட்டிய மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் வகுப்புவாரிபிரதிநிதித்துவ விஷயமாய் ஸ்ரீமான். பி. வரதராஜுலு நாயுடு ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அத்தீர்மானத்தை அடுத்த மீட்டிங்கில் வைத்துக்கொள்ளலாம் என்று ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் தந்திரமாய்த் தள்ளிவைத்துவிட்டார்.

### 29-வது ராஜீய மாகாண மகாநாடு.

1923-ம் வூ சேலத்தில் கூடிய 29-வது தமிழ் மாகாண மகாநாட்டு விஷயாலோசனைக் கமிட்டியில், ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு அதுசமயம் இல்லாவிட்டாலும், அவருக்காக அவர் நண்பர்கள் ஸ்ரீமான்கள். தண்டபாணி பிள்ளையோ, அல்லது பவானிசிங்கோ இதேதீர்மானத்தை பிரேரேபித்தபோது, ஸ்ரீமான். சி.ராஜகோபாலாச்சாரியார் முதலியவர் இது சமயம் ஒத்துழையாமையே போய்விடும்போல் இருக்கிறது,டெல்லி மகாநாடு தீர்ந்த பிறகு வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி அதை நிறுத்தச்செய்து விட்டார்கள்.

### 30-வது ராஜீய மாகாண மகாநாடு.

பின்னர் கூடிய 1924-ம் வருடத்திய திருவண்ணாமலையில் கூடிய 30-வது தமிழ் மாகாண மகாநாட்டில் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கருடைய அக்கிராசனப் பிரசங்கத்தில் வகுப்புவாரிப்பிரதிநிதித்வத்தைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டுமிருக்கிறது.

### பெல்காம் காங்கிரஸ்.

பெல்காமில் கூடிய ராஜீய காங்கிரசின் போதும், பிராமணரல்லாதாருக்கெனத் தனியாக ஓர் மகாநாட்டைக்கூட்டி வகுப்புவாரி பிரதிநிதித்வத்தைப்பற்றிப் பேசியதோடு, ஜஸ்டிஸ் கக்ஷியைப்பற்றியும், தீர்மானம் செய்திருக்கிறது. அதே சமயம், மகாத்மாவினிடமும் இதைப்பற்றி விரிவாய் எடுத்துச்சொன்னதோடு, ஸ்ரீமான்கள். ஆர். கே. ஷண்முகம் செட்டியார், பி. வரதராஜுலு நாயுடு, ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்வத்தைப்பற்றிச் சொல்லியுமிருக்கிறார்கள். மகாத்மாகாந்தியும் யோசித்துத் தக்கது செய்வதாய்ச் சொல்லியுமிருக்கிறார்.

### தஞ்சை தேசீய பிராமணரல்லாதார் மகாநாடு

இவ்வருடம் தஞ்சையில் ஸ்ரீமான். ஆதிநாராயண செட்டியார் உட்பட பிரதிநிதிகளாயிருந்ததேசீய பிராமணரல்லாதார் மகாநாட்டிலும், வகுப்புவாரிப்பிரதிநிதித்வத்தை வலியுறுத்தியிருக்கிறது.

இன்னும் எத்தனையோ விஷயங்கள் வகுப்புவாரிப்பிரதிநிதித்வ சரித்திரத்தைப் பற்றியும், தலைவர்களென்று சொல்லப்படுவோரின் தந்திரம், சூழ்ச்சி, குட்டிக்கரணம், குலத்தைக்கெடுக்கும் கோடரிக்காம்புத்தன்மை, முதலியவற்றைப்பற்றியும் விரிவாய் எடுத்துச் சொல்ல அடுத்த சந்தர்ப்பத்தை எதிர் பார்க்கிறோம். அல்லாமலும் பிராமணரல்லாதார் வகுப்பைச் சேர்ந்த உண்மைத் தொண்டர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதையும் அடுத்தாற்போல் எழுதலாமென்றிருக்கிறோம்.

# வைக்கம் சத்தியாக்கிரக வெற்றிக்கொண்டாட்டம்

திருவாங்கூர் ராஜ்யத்தில் அவர்ணஸ்தர்கள் அநுமதிக்கப்படாத பல தெருக்களிலும், ஜாதி பேதமின்றி மனித உடல் தாங்கிய யாவரும் நடக்கலாம் என்கிற கொள்கைக்கு வந்துவிட்டதோடு, திருவாங்கூர் அரசாங்கத்தாரும் அக்கொள்கைக்கு அநுகூலமாயிருந்து காரியத்தில் நடத்திக் கொடுத்துக் கொண்டுவருகிறார்கள். இதன் காரணமாய் வைக்கம் சத்தியாக்கிரகத்தை நிறுத்த ஓர் வெற்றிக் கொண்டாட்டம் சென்ற மாதம் 29-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கரின் அக்கிராசனத்தின் கீழ் வைக்கத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு, ஸ்ரீமான். ராமசாமி நாயக்கரின் மனைவியும், பல ஸ்திரீகளும், கேரள தலைவர்களும் உள்பட சுமார் 3000 ஜனங்கள் வரை கூடியிருந்தார்கள். ஆரம்பத்தில்,

**ஸ்ரீமான். கேலப்பன் நாயர்.**

அவர்களால் வரவேற்பு நடந்தது. சத்தியாக்கிரகத்தின் விருத்தாந்தங்களையும், ஸ்திரீகள் உதவி செய்த வகையையும் எடுத்துச சொல்லி வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கு இதுவரையில் 25,000 ரூபாய் வருலாகி செலவாகியிருக்கிறதென்று சொன்னார்.

**மன்னம் ஸ்ரீமான் பத்மநாத பிள்ளை.**

20 மாத சத்தியாக்கிரகத்தில், பல ஆயிரவருஷங்களாய் ஏற்பட்ட கொடுமைகள் அழிந்து போய்விட்டதென்றும், திருவாங்கூர் இராஜ்யத்திலுள்ள நாயர்களெல்லாம் சத்தியாக்கிரகத்திற்கு அநுகூலமாயிருந்தார்களென்றும், மலையாள நம்பூதிரிகள் அறியாத்தனத்தினாலும், குருட்டு நம்பிக்கையாலும், சத்தியாக்கிரகத்தை எதிர்த்து நின்றபோதிலும், அவர்களால் அவ்வளவு கெடுதிகள் ஏற்படவில்லையென்றும், ஆனால் தமிழ்நாட்டுப் பிராமணர்கள் தான் தங்களுடைய சோம்பேறி மடத்துச் சாப்பாடு போய்விடுமேயென்று பயந்துகொண்டு வேண்டுமென்றே பல அக்கிரமங்களையும், கொடுமைகளையும் சத்தியாக்கிரகத்துக்குச் செய்து வந்தார்களென்றும், ஆலயப் பிரவேசத்திற்குக் கூட நாயர்கள் கொஞ்சங் கூட விரோதமில்லையென்றும், நம்பூதிரிகளுக்கும் அவ்வளவு கடுமையான ஆக்ஷேபனையில்லை என்றும், அவர்கள் சொன்னால் ஒப்புக்கொள்ளக் கூடியவர்களென்றும், ஆனால், வெட்டிச் சோற்றைத் தின்பதற்காக இங்கு வந்திருக்கும் ஊட்டுப்பறை தமிழ் பிராமணர்கள் தான் கொடுமை செய்கிறார்களென்றும், அந்தத் தமிழ்ப் பிராமணர்களைக் கேரளத்தை விட்டுத் தமிழ் நாட்டிற்கே ஓட்டி விட்டால், திருவாங்கூர் ராஜ்யத்தில் ஒருகலகமும் இருக்காதென்றும், பேசியதோடு இனி எல்லா வகுப்பாரும் கோவிலுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்ய அநுமதிக்கும்படி சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும் என்று சொன்னார்.

**ஸ்ரீமான். டி. கே. மாதவன்.**

திருவாங்கூர் மகாராணியவர்கள் நமக்கு இப்போது அளித்துள்ள சில சவுகரியங்களை மறுபடியும் பிடுங்கிக்கொள்ளும்படி பட்டர்களென்னும் தமிழ்நாட்டுப் பிராமணர்கள் திவானைக் கைவசப்படுத்திக் கொண்டு சூழ்ச்சிகள் செய்து வருகின்றார்களென்றும், இதற்காக திருவாங்கூர் ஹெட் சர்க்கார் வக்கீல் ஸ்ரீமான். சுப்பையர் என்கிற ஒரு பட்டர் கங்கணங்கட்டிக்கொண்டிருக்கின்றாரென்றும், அடுத்தாற்போல் கோயில் பிரவேச சத்தியாக்கிரகம் ஆரம்பித்தால்த்தான் இப்போது ஏற்பட்டுள்ள வெற்றியானது நிலைக்குமென்றும், இல்லாவிட்டால் வஞ்சகப்பட்டர்கள் இதையும் பிடுங்கிக்கொள்ளுவார்களென்றும், நமது ஜனங்கள் முரட்டுத்தனமில்லாமல் சாதுவாய் நம்மைப்பின்பற்ற, பக்குவப்படுத்தி உடனே கோயில் பிரவேசம் ஆரம்பிக்கவேண்டுமென்றும், இதற்காக எல்லோரும் பண உதவி செய்யவேண்டுமென்றும், இந்தப்பட்டர்கள் நமக்கு விரோதிகளே ஒழிய அவர்கள் பிராமணர்களல்லவென்பதை எல்லோரும் உணர வேண்டுமென்றும் இந்து ஆறுதடவைகளில் இதைத்திருப்பித் திருப்பிக்கூறிவிட்டு அடியிற் கண்ட தீர்மானங்களைப் பிரேரேபித்தார்:—

“வைக்கம் சத்தியாக்கிரகத்தின் உத்தேசம் நிறைவேறிவிட்டதால், சத்தியாக்கிரகத்தை இன்று முதல் நிறுத்திவிட வேண்டுமென்றும், திருவாங்கூரிலுள்ள எல்லா ச்சாலைகளிலும் எல்லா ஜாதியாரும் நடக்க அரசாங்கத்தார் உதவியாயிருப்பதைப்பார்க்க அதிக சந்தோஷமடைவதோடு, கோயிலுக்குள்ளிருக்கும் தீண்டாமையையும் ஒழிக்கஎல்லா இந்துக்களும் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்றும், தெருக்களில் சுவாதீனமாய் நடக்கும் உரிமையை ரீஜண்டு மகாராணியார் அநுபவத்தில் நடக்க உதவி செய்ததற்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றி செலுத்துவதோடு கோயிற்பிரவேசத்திற்கும் இதே உதவி செய்வாரென்று எதிர்பார்க்கிறது என்றும், மகாத்மா காந்தியிடம் நம்பிக்கை இருப்பதோடு அஹிம்சா தர்மத்தைக் கண்டிப்பாகக் கைக்கொள்ள வேண்டியது என்றும், வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு பலவிதத்திலும் உதவி செய்த பொது ஜனங்களுக்கு இக்கூட்டம் நன்றி செலுத்துகின்றது” என்றும், தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

**ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.**

முடிவுரையில், தனக்கும், தமது மனைவிக்கும், செய்த உபசாரத்திற்காக நன்றி செலுத்துவதோடு சத்தியாக்கிரக இயக்கத்தின் ஜெயிப்பைப்பற்றியும், தோல்வியைப் பற்றியும் பேசுவதற்கு அதற்குள் காலம் வந்து விடவில்லையென்றும், தெருவில் நடக்க உரிமை கேட்பவர்களைச் சிறைக்கு அநுப்பிய அரசாங்கம், தெருவில் நடப்பதற்கு இப்போது நமக்கு வேண்டிய உதவி செய்ய முன் வந்திருப்பதைப் பார்த்தால் சத்தியாக்கிரகத்திற்கும், மகாத்மாவிற்கும் எவ்வளவு சக்தி இருக்கிறதென்பது விளங்குமென்றும், சத்தியாக்கிரக ஆரம்பத்தில் பிராமணர்கள் கக்ஷியில் இருந்த அரசாங்கத்தார், இப்போது பிராமணர்களுக்கு விரோதமாகவே தீண்டாதாரென்போரைக் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு சர்க்காரார் செல்லுவதை நாம் பார்க்கிறபோது நமக்கே சத்தியாக்கிரகத்தின் தன்மையைப்பற்றி ஆச்சரியப்படத்தக்கதாய் இருக்கிறதென்றும் கூறியதுடன், சத்தியாக்கிரகத்தில் ஏற்பட்ட கஷ்டங்களை நாம் பொறுமையாய் அநுபவித்து வந்ததால் இவ்வித சக்தியை இங்கு காண்கிறோம்; பலாத்காரத்திலோ, கோபத்திலோ, துவேஷத்திலோ, நாம் இறங்கியிருப்போமேயானால் இச்சக்தியை நாம் ஒருக்காலும் கண்டிருக்கவே மாட்டோம். சத்தியாக்கிரகத்தின் உத்தேசம், கேவலம் நாய், பன்றிகள் நடக்கும் தெருவில் நாம் நடக்க வேண்டுமென்பதல்ல. மனிதனுக்கு மனிதன் பொது வாழ்வில் வித்தியாசம் இருக்கக்கூடாதென்பதுதான். அந்த தத்துவம் இந்தத் தெருவில் நடந்ததோடு முடிந்து விடவில்லை. ஆகையால், தெருவில் நிரூபித்த சுதந்தரத்தைக் கோவிலுக்குள்ளும் நிரூபிக்க வேண்டியது மனிதர் கடமை. மகாத்மா காந்தியும், மகாராணியாரைக் கண்டு பேசிய காலத்தில், மகா ராணியார் மகாத்மாவைப் பார்த்து இப்பொழுது தெருவைத்திறந்து விட்டு விட்டால் உடனே கோயிற்குள் செல்ல பிரயத்தனப்படுவீர்களேயென்று கேட்டார்கள். மகாத்மா அவர்கள் ஆம், அது தான் என்னுடைய குறியென்றும், ஆனால் கோயிலுக்குள் செல்ல உரிமை வேண்டிய ஜனங்கள், போதுமான பொறுமையும், சந்தமும், அவசியமான தியாகமும் செய்யத் தயாராயிருக்கின்றார்களாவென்று, நான் அறியும் வரையில் அக்காரியத்தில் பிரவேசிக்கமாட்டேனென்றும், அதற்கு வேண்டிய காரியங்களை அது வரையில் செய்து கொண்டிருப்பேனென்றும் சொன்னார்.

வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு விரோதியாயிருந்தவர்கள் பிராமணர்களே ஒழிய அரசாங்கத்தார் அல்லவென்பதை அரசாங்கத்தார் நிரூபித்துக் காட்டி விட்டார்கள். மனித உரிமை அடைய அந்நிய மதங்களுக்குப் போவது மிகவும் இழிவான காரியமாகும். அப்படி அவசியமிருந்தாலும் கிறிஸ்துவ மதத்திற்காவது, மகமதிய மதத்திற்காவது செல்லலாமேயொழிய ஆரிய சமாஜத்திற்குப் போவது எனக்கு இஷ்டமில்லை. ஏனென்றால், ஆரிய சமாஜத்திற்குப் போவதானால் பொருளில்லாத-அர்த்தமற்ற, பூணூல் போட்டுக் கொள்ளுவதோடு, பொருளறியாத சந்தியாவந்தனமும் செய்து கொள்ள வேண்டும். இப்படி ஒரு காலத்தில் பூணூல் போட்டுக் கொண்டு சந்தியாவந்தனம் பண்ணினவர்கள்தான் இன்றையதினம் நமது சுதந்தரத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் விரோதிகளாயிருக்கின்றார்கள். அந்த நிலைமைக்கு நீங்களும் வரக்கூடாதென்று நினைப்பீர்களேயானால் கண்டிப்பாய் அந்தக் கூட்டத்தில் சேராதீர்கள், என்று சொல்லி மறுபடியும் தனக்காகவும், தன் மனைவிக்காகவும் செய்த உபசாரங்களுக்கு நன்றி செலுத்திக் கூட்டத்தைக் கலைத்தார்.

## ஸ்ரீமான். சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் 10 கற்பனைகள்.

27—11—25-ல் ஸ்ரீமான். ராஜகோபாலாச்சாரியார் "நவசக்தி" பத்திரிகைக்கு ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அதை நவசக்தி பொய்மான் வேட்டை என்ற தலைப்பில் பிரசுரித்திருக்கிறது. இது நீண்ட வியாசமாயிருப்பதால், அதில் உள்ள முக்கிய 10 விஷயங்களை மாத்திரம் எடுத்து ஆராய்வோம்.

(1) "பல காரணங்களால் உயர்பதவியடைந்த ஒரு ஜாதியாரைக்கண்டு பொறாமை கொண்டு மற்ற ஜாதியாரைச்சேர்ந்த பெரியோர்கள் அவர்களைத் தூஷித்து அவர்களை ஒடுக்குவதாக கிளர்ச்சி செய்தால்..............நன்மை விளைவதாக தோற்றம் காட்டலாம்; விரைவில் அப்பொய்த் தோற்றம் மறைந்து போய் பழைய கதையாய் முடியும்"

(2) "நாட்டிலுள்ள மற்ற சமூகங்களின் வெறுப்புக்கும் துவேஷத்திற்கும் பார்ப்பனர் ஆளாகும்படி தீவிர பிரசாரம் சிலர் செய்து வருகிறார்கள். இக்கிளர்ச்சியும், இதனால் உண்டாகும் துவேஷமும், நாட்டிற்கு கேடு விளைவிக்குமென்பதில் ஐயமில்லை".

(3) "வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் என்றால் ஒரு ஜாதியாரே யல்லாமல் பல ஜாதியார்கள் அதிகார சபையில் இருப்பது மாத்திரம் அல்லாததோடு, பிராமணர்களை பிராமணர் மாத்திரம் தெரிந்தெடுக்க வேண்டும் என்பதும், மற்ற ஜாதியார்கள் பிராமணரல்லாதார்களைத்தான் தேர்ந்தெடுக்கலாம் என்பதும் இந்த கிளர்ச்சியின் முழுப்பொருளாம். ...........பார்ப்பனர்களில் பெரும்பாலோர் பிராமண சமூகத்தின் பிரத்தியேக நன்மைக்காகவே தெரிந்தெடுப்பார்கள்."

(4) "சில பிரதிநிதிகள் தான் உட்புகலாம். பார்ப்பனரல்லாதவர்கள் எந்தப் பார்ப்பனனுக்கும் வாக்குக் கொடுக்க முடியாது. இவ்வகையில் தெரிந்தெடுக்கப்பட்ட சபைகள் அதிகாரம் செலுத்தி வந்தால் நாடு பிற்போக்கு அடையும் என்பதில் ஐயம் இல்லை."

(5) "வகுப்புவாரிபிரதிநிதித்துவம், இனி நீங்கள் நாட்டுக்குத் தொண்டு செய்யக்கூடாது என்று பார்ப்பனர்களுக்கு பெருந்தடை யுண்டாக்குவதேயாகும். பல்லாயிர வருஷங்கள் நாட்டிற்கு தொண்டு செய்து வந்த ஒரு ஜாதியை இவ்வளவு எளிதில் குற்றவாளிகளாகத் தீர்மானித்து ஒடுக்கிவிட முடியாது. அறிவு, பயிற்சி, தொண்டு செய்யும் திறமை, கொண்ட எவரும் நாட்டிற்கு வேண்டும்."...........

(6) "தற்காலத்தில் பார்ப்பனர்களின் மேல் சிலர் கொண்ட கொடுஞ்சினத்தின் காரணம் பண்டை கலை ஒழுக்கம், வேதம், சாஸ்திரம், கோயில், மடம் அனைத்துக்கும் கேடுவிளையும்போல்இருக்கிறது. சமஸ்கிருத பாஷைக்கும், தமிழுக்கும் போட்டி; இத்தகைய மயக்கம் தமிழ் மக்களுக்குள் சிலர் உண்டாக்கி வருகிறார்கள்."

(7) "பார்ப்பனர்களுடன் புரியும் போரில் கோயில் வேண்டாம், நோன்பு வேண்டாம், ஹிந்து மதமே பொய், பழைய ஒழுக்கங்களை அநாகரிகம் என்ற நாஸ்திக எண்ணங்களைப் பரப்புதல் ஏழை தமிழ் மக்களுக்கு பெருங்கேடாய் முடியும்"

(8) "ஜாதிப்பொறாமையை அஸ்திவாரமாகக் கொண்ட கட்சிகள் பயன் பெறாமல் போனபின்னும் உண்மை தேசத்தொண்டு செய்து வந்த என் நண்பர்கள் சிலர் இந்த ஜாதிச்சண்டையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்."

(9) "நின்றால் குற்றம், உட்கார்ந்தால் குற்றம் பழய புஸ்தகங்களில் இம்மாதிரி எழுதி இருக்கிறது என்ற வீண் சண்டைகள் யாதொரு நன்மையையும் பயவா"

(10) "அரசாங்க விஷயங்களில் ஜாதிப்பேச்சுகள் கூடாதென்றும், ஆனால் மத ஆசார விஷயங்களில் ஜாதிவித்தியாசத்தை ஒழிக்க தாம் போர் புரிவதாயும், ஒருவர் வீராவேசப்பேச்சுகள் பேசுகிறார். அரசாங்க விஷயத்திலாவது விஷமமுறைகள் அவ்வளவு கேடு விளைவியா. மதாசார சம்பந்தமாய் சாந்தமற்ற முரட்டு முறைகளை பின்தொடர்ந்தால் துவேஷம் அளவு கடந்து பரவி நாட்டில் வேற்றுமையும், பகைமையும் திமையுமே உண்டாகும்" என்ற இவைகள் முக்கியமானவைகளாகக்கருதி அவற்றிற்கு சமாதானம் சொல்லுவோம்.

இவற்றிலிருந்து, ஸ்ரீமான். ஆச்சாரியாரின் மனப்பான்மை இன்னதென்று அறிய சவுகரியமேற்பட்டு போய் விட்டது. அதாவது:—

(1) பல காரணங்களால் உயர் பதவி அடைந்த பிராமணர்களிடம் பொறாமை கொண்டு அவர்களை ஒடுக்குவதற்கு தீண்டாமை விலக்கு பிரசாரத்தின் பேரால் கிளர்ச்சி செய்வதாகவும், அது பலன் கொடுக்காது என்றும் பந்தயம் கூறுகிறார். இவருடைய தத்துவப்படி பார்த்தால் பல காரணங்களால் இந்தியாவை ஜயித்து தங்களது வாழ்க்கைக்கு ஆஸ்பதமான நாடாக்கி ஆண்டுவருவதைப்பார்த்து, பொறாமைப்பட்டுத்தான் சுயராஜ்யம் என்னும் பேரால் கிளர்ச்சி செய்கிறார் போலும், இவரும் பொறாமையால் தான் "இங்கிலீஷ்காரர் வாயில் மண்விழும்படியான" கதர் வேலையில் இவர் ஈடுபட்டிருக்கிறார் போலும், சீமைக்குப்போகும் பணத்தை நிறுத்துவது பொறாமைதான் போலும்; வெள்ளைக்காரரில் அயோக்கியனாயிருந்தாலும் பல காரணங்களால் ஜெயித்துவிட்ட ஜாதியானதால் அவனைக்கண்டால் நாம் சலாம் போடவேண்டுமென்பதும், அவன் 1000, 500 ரூ சம்பளத்துக்கு அருகன் என்பதும் நாம் எவ்வளவு யோக்கியனானாலும் நாம் கூலி என்பதும் 10, 20 ரூ சம்பளத்துக்குத்தான் லாயக்கென்பதும் மாறவேண்டுமென்று கிளர்ச்சி செய்தால் அது பொறாமை போலும்;

நீயும் நானும் மனிதன் தானே தென் ஆப்பிரிக்கா வீதியில் நீ மாத்திரம் நடக்கலாம்; நான் மாத்திரம் ஏன் நடக்கக்கூடாது என்பது பொறாமை போலும், இதெல்லாம் வெள்ளைக்காரரைத் தூஷித்து அவர்களை ஒடுக்கத்தான் ஸ்ரீமான்கள். ராஜகோபாலாச்சாரியார், சத்தியமூர்த்தி போன்றார்கள் கிளர்ச்சி செய்கிறார்கள் போலும், அப்படியானால் அது கண்டிப்பாய் ஜெயம் பெறாது போலும்.

தன்னைப்போல்பிறரை நேசிக்கும் குணமோ, எண்ணும் குணமோ இருக்குமிடங்களில் இவை யெல்லாம் பொறாமை என்கிற எண்ணம் உதிக்குமா?

(2) நாட்டிலுள்ளவர்களின் வெறுப்புக்கும் துவேஷத்திற்கும் பிராமணர் ஆளாகும்படி சிலர் பிரசாரம் செய்கிறார்கள், இது நாட்டிற்குத்தான் கேடு என்பது. பஞ்சாபிற்கு சர்க்கார் செய்த அக்கிரமத்திற்கு மகாத்மா கிளர்ச்சி செய்து ஒத்துழையாமை ஏற்படுத்தினது வெள்ளைக்காரர் மேல் நாட்டாருக்கு துவேஷம் ஏற்படத்தான் செய்தது போலும்; இக்கிளர்ச்சியால்தான் இந்தியாவுக்கு கேடு விளைந்தது போலும்;

(3)-(4) வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்றால், பிராமணர்களைப் பிராமணர் மாத்திரம் தெரிந்தெடுக்க வேண்டுமென்பது மற்ற ஜாதியார் பிராமணரல்லாதாரைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்கிற பொருளாதலால் இவ்வகை தெரிந்தெடுப்பால் நாடு பிற்போக்கடையும் என்பது. கிருஸ்தவர்களை கிருஸ்தவர்கள் தெரிந்தெடுத்தாலும், மகமதியரை மகமதியரே தெரிந்தெடுத்தாலும், இந்துக்களை இந்துக்கள் தெரிந்தெடுத்தாலும் தான் நாடு பிற்போக்கடைந்து விட்டது போலும்; அதற்குமுன் நாடு முற்போக்கிலிருந்ததுபோலும்; இவற்றிலெல்லாம் ஏற்படாத பிற்போக்கு பிராமணர்களைப் பிராமணர் தேர்ந்தெடுப்பதாலும், பிராமணரல்லாதார்களை பிராமணரல்லாதார் தெரிந்தெடுப்பதினாலும் ஏற்பட்டு விடும் போலும்;

(5) வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இனி நீங்கள் நாட்டுக்கு தொண்டு செய்யக்கூடாது என்று பார்ப்பனர்க்கு பெரும் தடையுண்டாகுவதோடு பல்லாயிரக்கணக்கான வருஷங்களாய் நாட்டுக்கு தொண்டு செய்து வந்த ஜாதியை இவ்வளவு சிக்கிரத்தில் ஒடுக்கிவிட முடியாது என்கிற பந்தயமும், அறிவு, பயிற்சி தொண்டுசெய்யும் திறமை கொண்ட எவரும் நாட்டுக்கு வேண்டும் என்பதும். சர்க்காரை, எங்களை நாங்களே தெரிந்தெடுத்துக்கொள்ளும் பாத்தியம் கேட்பது, வெள்ளைக்காரரே நாட்டுக்கு வேண்டாம் என்று சொல்வதுதான் போலும்; அல்லாமலும் 200 வருஷம் நாட்டுக்குப் "பிராமணர்களைவிட அதிகமாகத் தொண்டு செய்த" ஒரு சர்க்காரை வெகு எளிதில் நாட்டை விட்டு போங்கள் என்று சொல்லுவது போலத்தான் போலும். அறிவு பயிற்சி தொண்டு செய்யும் திறமை வெள்ளைக்காரருக்கு மாத்திரமே உண்

டு மற்றவர்களுக்கு இல்லை போலும்; ஆகையால் பிராமணரை நாம் தெரிந்தெடுக்காவிட்டால் அறிவு, பயிற்சி, தொண்டு செய்யும் திறமை உள்ளவர்கள் வேறு வகுப்பில் சுத்தமாய் கிடைக்கமாட்டார்கள் போலும்;

(6) பார்ப்பனர்மேல் உள்ள கொடுஞ் சினத்தால் பண்டைக்கலை, ஒழுக்கம், வேதம், சாஸ்திரம், கோவில், மடம் அனைத்துக்கும் கேடு விளையும்போல் இருக்கிறது என்பதும், சமஸ்கிருத பாஷைக்கும் தமிழுக்கும் போட்டி என்பது.

வெள்ளைக்காரர் மேல் உள்ள கோபத்தால்தான் டையரின நமது பிள்ளைகளுக்கு நாம் வேண்டாம் என்கிறோம் போலும், நாம் படிக்கக்கூடாது என்றும் சொல்லப்படும் வேதம் நமக்கு எதற்கு? பார்ப்பான் உயர்ந்தவன் மற்றவன் சூத்திரன் தாசி மகன் என்கிற கலையும், சாஸ்திரமும் பார்ப்பனரல்லாதாருக்கு எதற்கு? பார்ப்பனர் தவிர மற்றவர் உள்ளே போவதால் கோவில் அசுத்தமாய்ப் போய்விடுமானால் பார்ப்பனர் தவிர மற்றவர் கிட்டப்போனால் சுவாமிக்கு சக்தி குறைந்து போகுமானால், அந்த கோவில் நமக்கு எதற்கு? பார்ப்பனரல்லாதார் பணத்தை வாங்கி விபசாரதரகுக்கும், தாசி வேசிக்கும், கள்ளு சாராயத்திற்கும், செலவு செய்யவும் வெறும் சோம்பேறிகளுக்கு பொங்கிப் போடவும் செலவழிப்பதும் அல்லாமல் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கோ சுயமரியாதைக்கோ ஒரு காரியமும் நடவாதிருக்குமானால் அம்மாதிரி மடம்தான் எதற்கு? அதற்கு ஏனோ பார்ப்பனரல்லாதார் பணம் கொடுக்கவேண்டும்? தமிழ்நாட்டு பாஷையாகிய தமிழைப்பற்றி அக்கரையில்லை; தமிழர் கொடுக்கும் வரிப்பணத்தை அள்ளி சமஸ்கிருத பாஷைக்குத்தான் செலவு செய்யவேண்டும். சமஸ்கிருதத்திற்கு சமமாகக் கூட தமிழுக்கு யோக்யதைகொடுக்கக்கூடாது என்று சொல்வதை ஒப்புக்கொள்ளாவிட்டால் அது போட்டி போலும். தமிழ் அகராதி எழுதுவதற்கு 10 வருஷகாலமாய் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவு செய்து பார்ப்பனரைத்தான் வைக்கவேண்டும், அவர்கள் தான் தமிழுக்கு உரை எழுதவேண்டும், பார்ப்பனரல்லாதார் அதில் இருக்கக்கூடாது என்பதை ஒப்புக்கொள்ளாவிட்டால், அது தமிழுக்கும் சமஸ்கிருதத்திற்கும் போட்டி போலும்; அப்படியானால் பள்ளியில் பாடங்களை தேசபாஷையாகிய தமிழில் தான் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று சொல்வதுகூட இங்கிலீஷுக்கும் தமிழுக்கும் போட்டி போலும்.

(7) பார்ப்பனருடன் புரியும்போரில் கோயில் வேண்டாம், நோன்பு வேண்டாம், இந்து மதம் வேண்டாம், பழைய ஒழுக்கங்கள் அநாகரிகம் என்ற எண்ணங்களை பரப்புதல் ஏழைத்தமிழ் மக்களுக்கு பெருங்கேடாய் முடியும் என்பது.

பிராமணன் தவிர மற்றவன் உள்ளே போகக்கூடாது என்பதுதான் கோவிலானால் அது வேண்டவே வேண்டாம்.

பார்ப்பனருக்கு கொடுப்பதுதான் புண்ணியம், பார்ப்பனருக்கு கொடுத்தால் தான் மோக்ஷம் என்பது தான் நோன்பானால் அந்நோன்புவேண்டவே வேண்டாம்.

தனது மதத்தில் இருக்கும் வரை ஒருவன் தீண்டாதவன், பார்க்கத்தகாதவன், தெருவில் நடக்கத்தகாதவன், சண்டாளன் வேறு மதத்திற்கு போனால், அவன் பரிசுத்தன் என்கிற கொள்கையை உடையதுதான் இந்து மதம் என்றால், அம்மாதிரியான இந்து மதம் வேண்டவே வேண்டாம். அந்த மாதிரி மதம் பொய்யே பொய்தான்.

திருடினாலும் பிராமணன், குடித்தாலும் பிராமணன், லஞ்சம் வாங்கினாலும் பிராமணன், பொய் சொன்னாலும் பிராமணன், வக்கீல் வேலை செய்தாலும் பிராமணன், கொடுமை செய்யும் அரசாங்கத்திற்கு உளவாளியாயிருந்தாலும் பிராமணன், என்று சொல்வதுதான் பழைய ஒழுக்கமும், தர்மமுமாயிருக்குமானால், அவ்வித ஒழுக்கமும், தர்மமும் நமது நாட்டுக்கும், எதிரியின் நாட்டுக்கும்கூட வேண்டவே வேண்டாம். இவைதான் நாகரிகமானால் இவையல்லாத அநாகரிகமே மேலானது. இதை ஏழை மக்களிடம் பரப்புவதால் தமிழ் மக்களுக்கு கேடு வருவதோடு நரகம் வந்தாலும், அதற்காக பயப்படுபவன் மனிதனல்ல.

(8) ஜாதிப் பொறாமையை அஸ்திவாரமாகக் கொண்ட கட்சிகள் பயன் பெறாமல் போன பின்பும், உண்மை தேசத் தொண்டு செய்து வந்த என் நண்பர்கள் இந்த ஜாதிச் சண்டையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது.

இது ஜஸ்டிஸ் கட்சியையும், ஸ்ரீமான்கள். எஸ். ராமநாதன், ஈ. வெ ராமசாமி நாயக்கர் முதலியோர்களை குறிப்பது.

இந்நாட்டில் தற்கால மாதிரியான பிராமண ஆதிக்கம் உள்ள வரையில் ஜஸ்டிஸ் கட்சி ஒழியவே ஒழியாது; பயன் பெறாமலும் போகாது. அது செய்த பயன் அளவிட்டு சொல்லமுடியாது; ஒத்துழையாமை எவ்வளவு தூரம் நாட்டு பாமர மக்களுக்கும் அரசாங்கத்தின் அக்கிரமம் விளங்கும்படி செய்து அரசாங்கத்தின் அகம்பாவம் ஒழிந்து பிரித்தாளும் தந்திரத்திலும், சூழ்ச்சியிலும் ராஜ்யபாரம் நடக்கச்செய்திருக்கிறதோ, அது போல் ஜஸ்டிஸ் கக்ஷி, பிராமணரல்லாத பாமர ஜனங்களுக்கு பிராமண ஆதிக்கத்தின் அக்கிரமங்களை விளங்கும்படி செய்து பிராமணர் தாங்கள் உயர்ந்த ஜாதி என்று சொல்லி ஒரு காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் அகம்பாவத்தை ஒழித்து பிராமணரல்லாதாரில் சிலரைச் சுவாதீனப்படுத்தி ஒருவர்மேல் ஒருவரை ஏவிவிட்டு பிரித்தாளும் தந்திரத்திலும், சூழ்ச்சியிலும் தங்கள் ஆதிக்கத்தை காப்பாற்றும்படியான நிலைமையில் இறக்கிவிட்டது. ஆயிரக்கணக்கான வருஷங்களின் அக்கிரமங்களை பத்து வருஷத்தில் அஸ்திவாரத்தையே ஆட்டி விட்டதானால், இனி பாக்கியுள்ள வருஷங்களில் அது எவ்வளவு வேலை செய்யக்கூடும் என்பதை ஆச்சாரியார் அறியாமலில்லை. ஆனாலும் பாமர ஜனங்களுக்கு சொல்லுவது தானே என்கிற முறையில் சொல்லுகிறார். ஸ்ரீமான்கள். எஸ். ராமநாதனும், ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் செய்யும் தொண்டு, ஜாதிச் சண்டையானால் ஸ்ரீமான்கள். சீனிவாசய்யங்காரும், ஏ. ரங்கசாமி அய்யங்காரும், எம். கே. ஆச்சாரியாரும், S. சத்தியமூர்த்தியும் மகந்துக்களும், லோககுருக்களும், சி. ராஜகோபாலாச்சாரியாரும், செய்யும் தொண்டுகள் என்ன பெயரை உடையதோ! வாசகர்கள் தான் அறிந்து கொள்ளவேண்டும்.

(9) நின்றால் குற்றம், உட்கார்ந்தால் குற்றம், பழைய புஸ்தகங்களில் இப்படி இருக்கிறது, அப்படி இருக்கிறது, என்ற வீண் சண்டை பலன்தராது என்று பந்தயம் கூறுவது.

இதைக் குறிப்பாய் சொன்னால் நன்றாயிருந்திருக்கும். அம்மாதிரி மநு முதலிய பழைய புஸ்தகங்களை இவர் ஒப்புக்கொள்ளுகிறாரா அல்லது தள்ளி விடுகிறாரா? பிராமண ஆதிக்கம் வந்தால் இந்த புஸ்தகம் அமுலுக்குவருமா வராதா? (திருப்பூர் காங்கிரஸில் ஒரு தகராரின்போது அந்த புஸ்தகங்கள் தான் இன்றைக்கில்லாவிட்டாலும் மற்றொரு நாளைக்காவது தர்மங்களை காக்க உபயோகப்படும் என்று ஸ்ரீமான் ஆச்சாரியார் சொன்னவுடன், வெள்ளைக்கார ஆட்சி அடங்கி பிராமண ஆக்ஷி எற்பட்ட உடன் தானே என்று ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமிநாயக்கர் சொன்னதும் ஆச்சாரியார் புன்சிரிப்பு சிரித்தார். அது இப்போது ஞாபகத்துக்கு வருகிறது)

10. அரசாங்க விஷயங்களில் ஜாதிப் பேச்சு கூடாது, ஆனால் மத ஆச்சார விஷயங்களில் ஜாதிவித்தியாசத்தை ஒழிக்கதாம் போர்புரிவதாய் ஒருவர் வீராவேச பேச்சுகள் பேசுகிறார். அரசாங்க விஷயத்திலாவது, விஷமமுறைகள் அவ்வளவு கேடுவிளையா. மத ஆச்சார சம்பந்தமாய் தொடர்ந்தால் துவேஷம் அளவுகடந்து பகைநிலைமையை உண்டாக்கும் என்பது.

இது ஸ்ரீமான். P. வரதராஜுலு நாயுடுவைகுறிப்பது. ஜாதி வித்தியாசக்கொடுமையைராஜ்யவிஷயத்தில் நுழைத்தால் ஸ்ரீமான்கள். ஸ்ரீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ஏ. ரங்கசாமி அய்யங்கார், M. K. ஆச்சாரியார் இவர்கள் "நாடு கெட்டுப்போகும்" என்று சொல்லுகிறார்கள். சமூக மதவிஷயத்தில் நுழைத்தால் ஸ்ரீமான். C. ராஜகோபாலாச்சாரியார் "நாட்டில் தீமை விளைந்துவிடும்" என்று சொல்லுகிறார். அப்படியானால் ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுவையும், ஈ. வெ. ராமசாமி நாயக்கரையும், S ராமநாதனையும் இவர்கள் என்னதான் பண்ணச்சொல்லுகிறார்களோ தெரியவில்லை. ஒருசமயம் ஸ்ரீமான் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்போல் திருகனி பிரங்கியாய் இருக்கச்சொல்லுகிறார்களோ என்னமோ தெரியவில்லை. அப்படி இருந்தால் அவரவர்கள் பத்திரிகைகளுக்குகூட வாரம் ஒருமுறை கற்பனைகள் வெளியிடக்கொடுத்து உதவுவார்கள்போல் இருக்கிறது.

---

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

''ஸ்ஸபுல் இஸ்லாம்:- (25-11-25)......

''நம் சென்னை மாகாணத்தில் பிராமணர்களுக்கும், பிராமணரல்லாதாருக்குமிடையில் சென்ற சில வருஷங்களாக ஏற்பட்டு வளர்ந்துவரும் மனக்கசப்பையும், மாச்சரியத்தையும் ஒழிப்பதற்கான சரியான தருணம் காஞ்சியில் ஏற்பட்டது. அத்தருணத்தை மகாநாட்டுப் பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர் தகுந்தவாறு உபயோகித்து, தென்னாட்டில் ஒற்றுமைக்கான விதையை விதைக்காமல் பழைய நிலைமையை உறுதிப்படுத்தி ஸ்திரப்படுத்துவதிலேயே முனைந்து நின்றது நம் துரதிர்ஷ்டமேயாகும். சட்ட சபைகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், அரசாங்க உத்தியோகங்களிலும் தங்களின் ஜனத்தொகைக்கேற்ப பிராமணரல்லாதாருக்குப்பிரதிநிதித்துவம் இல்லை எனும் உணர்ச்சியே தென்னாட்டைச் சென்ற சில வருஷங்களாக அலைத்துவரும் வகுப்பு வேற்றுமைக்கு முக்கிய காரணமென்பதை எவரும் மறுக்க முடியாது. இவ்வகுப்பு வேற்றுமையை ஒழித்துவிடின், தேசியப்போராட்டத்தில் பிராமணரும்-பிராமணரல்லாதாரும் பூரண ஒற்றுமையுடன் ஈடுபட்டு உழைப்பதற்குச் சந்தர்ப்பம்வாய்த்து விடுமென்பது நிச்சயம். இவ்வழியில் காரியம் செய்வது அத்தியாவசியமென்பதை உணர்ந்த ஸ்ரீமான்கள். ஈ. வெ. ராமசாமி நாயக்கர், எஸ். ராமநாதன் முதலியவர்கள் காஞ்சியில் பிராமணரல்லாதாரின் ஆலோசனைக் கூட்டமொன்று கூட்டினர். அக்கூட்டத்தின் நோக்கத்தை ஒப்புக்கொள்ளாத சிலர் அங்கு குழப்பம் விளைவிக்க முயற்சித்த போதிலும், இறுதியில் ஒரு சமரசத்தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. அத்தீர்மானத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் விவாதிக்க நமக்குத் தற்பொழுது அவகாசமில்லையாயினும், அதன் பொதுவான நோக்கத்தை நாம் மனப்பூரணமாய் ஒப்புக்கொள்ளுகிறோம். தென் இந்தியாவில் பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாருக்குமிடையில் இருந்துவரும் வேற்றுமையும் மாச்சரியமும் சீக்கிரம் ஒழியவேண்டுமாயின், மேற்படி தீர்மானத்தில் கண்டிருப்பது போன்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஏற்பாடொன்று அத்தியாவசியம்.''

''சட்டசபைகளிலும், ஸ்தலஸ்தபானங்களிலும், அரசாங்க உத்தியோகங்களிலும் பிராமணரல்லாதாரின் தொகையை நிர்ணயத்து விட்டால் தற்பொழுதைய வகுப்பு வேற்றுமைகள் வெகு சீக்கிரத்தில் பறந்து விடும்''

''வகுப்புவாரிபிரதிநிதித்துவம் அளித்து விடின் பிராமணரல்லாதார்களின் அவநம்பிக்கை நீங்கி அவர்கள் தேசிய இயக்கத்தில் முன்னைவிடத் தீவிரமாய்ச் சேருவார்களென்பதே ஸ்ரீமான். ராமசாமி நாயக்கரின் வாதம். இது நமக்குச் சரியென்றே புலப்படுகிறது.''

''காஞ்சியில் நடைபெற்ற பிராமணரல்லாதாரின் ஆலோசனைக்கூட்டத்தில் நிறைவேறப்பட்டுள்ள தீர்மானத்தில் கண்டிருக்கிறபடி, நம்மாகாணத்தின் விசேஷ சந்தர்ப்பங்களையும் இங்குள்ள வகுப்புத் துவேஷங்களையும் உத்தேசித்து வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் தற்காலிக ஏற்பாடாக வற்புறுத்தப்படுகிறதேயன்றி அது ஒரு சாசுவதமான முறையாக ஒப்புக்கொள்ளப்படவில்லை. இக்காரணங்களையெல்லாம் நன்கு ஆலோசித்து, காஞ்சி மகாநாட்டினர் பிரதாஸ்ப விஷயத்தைப்பற்றி ஏதாவது ஒரு முடிவுக்கு வந்திருந்தால் நம் மாகாணத்தின் ராஜீய வாழ்வைச் சீர்குலைத்துவரும் வகுப்பு வேற்றுமைகள் ஒழிவதற்கு ஹேது உண்டாயிருக்கும். இப்படிப்பட்ட அருமையான தருணத்தை அவர்கள் புறக்கணித்து விட்டதைப்பற்றி வருத்தப்படாமலிருக்க முடியவில்லை.''

---

## வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தைப் பற்றி ''காம்ரேட்''

மௌலானா முகமதலி வகுப்புவாரிப்பிரதிநிதித்வத்தைப்பற்றித் தமது ''காம்ரேட்'' பத்திரிக்கையில் சென்ற ஜனவரி மாதம் எழுதியிருப்பதாவது:—

''முஸ்லிம்களுக்குத் தனி வாக்காளர்த் தொகுதிகள் ஏற்படுத்தியிருப்பதைக் கண்டித்து, அதற்காக மிகத் துயருறுபவர்களுடைய ஞாபகத்துக்குக் கீழ்கண்ட விஷயத்தை மட்டும் கொண்டுவர விரும்புகிறோம். முஸ்லிம்களுக்கும் அவர்களைவிட ஜனத்தொகையில் அதிகமாயும், கல்வியில் அதிகத் தேர்ச்சிபெற்றும், செல்வத்தில் மிக்க மிகைத்தவர்களாயுமுள்ள அவர்களுடைய ஹிந்து சகோதரர்களுக்குமிடையிலுள்ள வேற்றுமையின் காரணமாகத் தனி வாக்காளர்த் தொகுதிகள் ஏற்பட்டனவேயொழிய அவ்வேற்றுமைக்கு மேற்கண்ட தனி வாக்காளர்த் தொகுதிகள் காரணமாக இருக்கவில்லை''

''இந்திய ராஜீய விஷயங்களில் முஸ்லிம்கள் தலையிடுவதற்கான நிலைமையை வகுப்வாரிப்பிரதிநிதித்துவமும், தனி வாக்காளர்த் தொகுதியும்தான் உண்டு பண்ணினவென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். தேர்தல் நடக்குமிடங்களில முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதாரும் பிரிக்கப்பட்டிருந்திருக்கிறபோதிலும், தேர்தலுக்குப்பின் சட்ட சபையில் அவர்கள் தோளோடு தோள் இணைத்து அதிகார வர்க்கத்தினரை எதிர்த்துப் போராடி இருக்கிறார்கள். ............பதினைந்துவருஷங்களுக்கு முன் அதாவது, ராஜீய துறையில் அவர்களுக்கு மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் ஒருவித அந்தஸ்தைக் கொடுப்பதற்கு முன் இருந்த நிலைமைக்குத் திரும்பிப் போகும்படி (அதாவது வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தையும், தனி வாக்காளர் தொகுதியையும் விட்டுவிடும்படி) இந்திய முஸ்லிம்களைச் செய்துவிடலாமென இன்று எவராவது நம்புகிறாராயின், அவர் சாதாரண புத்தியுள்ள மனிதனாக இருக்க முடியாதென்பது நிச்சயம்.''

---

## மகாத்மாவின் உண்ணா விரதம்.

### ''குபேரன் பட்டணத்திலும் இரு பிச்சைக்காரர்கள்''.

மகாத்மா காந்திபடிகள் சில தினங்களுக்கு முன் சபர்மதி ஆச்ரமத்தில் நடந்த சில ஒழுங்கீனங்களைப் பற்றி ஒருவாரம் உண்ணா விரதம் ஏற்று அதனை நிறைவேற்றிய பின், இம்மாதம் முதல் தேதி உணவு கொண்டார் என்னும் விஷயத்தைப் பொது ஜனங்கள் அறிந்திருக்கலாம். இங்ஙனம் உண்ணா விரதமேற்கொண்டதற்குக் காரணத்தைத் தமது ''யங் இந்தியா''வில் காந்தியடிகள் குறிப்பிட்டிருக்கிறார். அதன் சாராம்சத்தைக் கீழே குறிப்பிடுகிறோம்:—

''சத்தியாக்கிரக ஆச்ரமம் என்றும் ஓர் பெரிய ஸ்தாபனத்தை நான் நடத்தி வருகிறேன். என்னுடைய அருமையான நண்பர்கள் சிலர் அதற்கென்று இரண்டு லக்ஷம் ரூபாய் பெறுமான நிலமும், கட்டடங்களும் கொடுத்திருக்கிறார்கள். வருடமொன்றுக்கு இதன் செலவுக்காக பதினெட்டாயிரம் ரூபாயும் உதவி வருகின்றனர். அதில் சேர்ந்துள்ளவர்களின் ஒழுக்கத்தை நான் சீர்ப்படுத்தி வருகிறேன் என நம்பியே அச்சினேகிதர்கள் இவ்வளவு உதவியும் செய்து வருகின்றார்கள். இந்த ஆசிரமத்தில் வயதுக்கு வந்த பெண்களும், ஆண்களும் இருக்கிறார்கள். பால்யப் பருவமான பையன்களும், பெண்களும் வசிக்கிறார்கள். பின் கூறுபவர்கள், எவ்வளவு காலம் கூடுமோ அவ்வளவு காலம்வரை கலியாணமின்றி இருக்கும்படியாகச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனத்தில், பெண்களுக்கும், ஆண்களுக்கும், முற்றிலும் சுயேச்சை கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வித சுயேச்சை நானறிந்தவரையில் வேறிடத்தில் கிடையாதென்றே சொல்லுவேன். நான் செய்துள்ள வேலைகளில், இந்த ஆசிரமத்தை ஸ்தாபித்திருப்பதுவே சிரேஷ்டமானது என்று கூறலாம். இதில் உள்ள சில பெண்களும், சில பையன்களும் ஒழுங்கு தவறி நடந்தார்களெனத் தெரியவந்தது. இப்பேர்ப்பட்ட ஒழுங்கீனம் சாதாரணமாய் எந்த ஸ்தாபனத்திலும் நடக்கிறது தான் என்றாலும், நமது நாட்டின் ஜீவநாடியை நிலைகுலையச்செய்து, நமது சிறுவர், சிறுமிகளின் நடத்தையை அழித்துவரும் இத்தகைய தவறுதல்கள் ஆசிரமத்தில் தலைகாட்டக்கூடாதென்பதே எனது கருத்தாகும். இப்படி ஒழுங்கு தவறி நடப்பவர்களைத் தண்டிப்பதிலும் பயனில்லை. தண்டனையால் இவர்கள் பரிசுத்தமடைந்து விடுவதில்லை என்பதே எனது அநுபவம். இத்தகைய நிகழ்ச்சிகளில் நான் தென்னாப்பிரிக்காவில் பட்டினி கிடந்தே சீர்ப்படுத்தியிருக்கிறேன். அதே முறையைத்தான் இப்பொழுதும் அநுசரித்தேன்''

தப்பிதம் செய்த மக்களைத் தண்டித்தல் தவறு என உணர்ந்து, அவர்களைப்பரிசுத்தப்படுத்த, மகாத்மா உண்ணாவிரத மேற்கொண்டதை நினைக்க, அவருடைய அரிய மேன்மை மலைமேலேற்றிய தீபம்போல் ஜொலிக்கிறது; அஹிம்சையின் தத்துவமும் விளங்குகிறது. உண்ணாவிரதத்தின் போது அவருக்குப்போதிய வலிமை அளித்த கடவுளுக்கு எமது வணக்கம்.

---

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.


தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளைபீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,
காரியதரிசிகத்தர், இலாகா.



## உண்மையான கதர். கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமானகடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்

## ஓர் மஹானின் மகிமை.

"அருமையான மூலிகையும் ரஸைஷயும்."

குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றவை.

எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா பேட்டுப்பாளையம் பாலச்சந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக்கு விபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புஸ்தகமும் கிடைக்கும்.

## இலங்கை நாட்டுக்கு நமது ஏஜண்டு.

இலங்கை நாட்டுக்கு நமது "குடி அரசு"ப் பத்திரிக்கையின் ஏஜண்டாக இருக்க கொழும்பு செட்டித்தெரு, 45-ம் நெம்பர் கட்டடத்திலுள்ள சுத்தக் கத்தர் ஜவுளி நிலையம், ஸ்ரீமான். பெ.பெரி. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களைக் கேட்டுக்கொண்டதின் பேரில் அவரும் சம்மதித்ததால் அவரை நியமித்திருக்கிறோம். நமது பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர விரும்புகிறவர்கள் ஷையாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்.

இனாம்! இனாம்!!

நூறு வருஷத்திய காலண்டரும், புஸ்தக சமாச்சாரங்களடங்கிய பத்திரிகையும் தபால் செலவின்றி அனுப்புவோம்.

ஸ்ரீ சாது ரத்ந சற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் (P. O) சென்னை.

## "தேசோபகாரி"

பர்மாவில் விதேலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்,
"தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி, ரங்கூன்.

## "தேசபக்தன்"

ஓர் தேசீயத்தமிழ் பத்திரிகை.
பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற் கேற்றது.

வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடியுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.
பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. 2-0-0
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. 1-8-0

காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

## நவ இந்தியா.

தேசமுன்னேற்றத்துக்கென உழைக்கும் ஓர் வாரப்பத்திரிகை.

ஆசிரியர்.
ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியார்.

வருட சந்தா ரூ. 5.

மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I Ry.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை காஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரைய ஜாப்தாவுக்கு எழுதுங்கள்

ஆதங்க நிக்ஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

## விசேஷ அறிவிப்பு.

நமது "குடி அரசு" பத்திரிக்கையை தென் இந்தியா ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள மெஸர்ஸ் ஹிக்கின்பாதம்ஸ் கம்பெனியார்களின் புத்தக சாலைகளில், விற்பனைசெய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தேவையுள்ளவர்கள் வாங்கிக் கொள்ளலாம்.

விலை அணா ஒன்று

மானேஜர்.

டைமண்ட் பிரஸ்,
ஈரோடு

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்லீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரொப்ரைட்டர்.

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.